*"பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினானே"*

*-நன்னூல்*

# ஒன்றியப்பள்ளி ஆசிரியரும் பணிமுப்புப்பட்டியலும்

## கட்டுரை


ஆக்கம்

**சி.ரா. ஸ்டனிஸ் ரத்தினம்**


30.06.2020

***சி.ரா. ஸ்டனிஸ் ரத்தினம்,***
**பட்டதாரி ஆசிரியர்,**
ஊ.ஒ.நடுநிலைப்பள்ளி,
ஆத்துப்பட்டி,
மருங்காபுரி ஒன்றியம்,
திருச்சிராப்பள்ளி மாவட்டம்.
**9150056221 / 7010576700**
**stanis.rathinam@gmail.com**



## என்னுரை

நான் 1970ல் தூத்துக்குடியில் பிறந்தேன். 1987ல் பள்ளிக் கல்வியினையும் அடுத்து 1989ல் இடைநிலை ஆசிரியர் பயிற்சியினையும் நிறைவு செய்தேன். 1995ல் ஆசிரியர் தேர்வு வாரியத்தின் மூலம் தொடக்கக் கல்வித் துறையில் இடைநிலை ஆசிரியராக, தூத்துக்குடி மாவட்டம் கருங்குளம் ஒன்றியத்தில் பணியில் சேர்ந்தேன்; திருமணத்திற்குப் பின்னர் குடும்பச் சூழ்நிலை காரணமாக திருச்சிராப்பள்ளி மாவட்டம் மருங்காபுரி ஒன்றியத்திற்கு மாறுதல் பெற்றேன்; அதைத் தொடர்ந்து, அந்தநல்லூர் ஒன்றியத்திற்கு மாறுதலில் சென்றேன். B.Lit(T), M.A(T), B.Sc(M), B.Ed.,பட்டப்படிப்பினை முடித்திருந்த நான், அந்தநல்லூர் ஒன்றியத்தில் பதவி உயர்வுக்கான வாய்ப்புகள் இல்லாத நிலையில், பதவி உயர்வினை எதிர் நோக்கி, பதவி உயர்வு வாய்ப்புகள் அதிகம் உள்ள மருங்காபுரி ஒன்றியத்திற்கு, 2010ல் மீண்டும் மாறுதல் பெற்றேன். 2014ல் பதவி உயர்வு பெற்று தற்போது அந்த ஒன்றியத்தில் கணிதப் பட்டதாரி ஆசிரியராகப் பணியாற்றி வருகிறேன்.

தொடக்கக் கல்வித்துறையில் பணியாற்றும் ஆசிரியர்களுக்குப் பதவி உயர்வுக்கு அடிப்படையான, ஒன்றிய அளவில் இன்றளவும் பேணப்படும் பணிமூப்புப் பட்டியல் நடைமுறை காலத்தால் பழமையானது. இந்நடைமுறையால் தொடக்கக் கல்வித்துறையில் பணியாற்றும் ஆசிரியர்கள் பதவி உயர்வு வாய்ப்பில், சமூக நீதிக்கு எதிரான பல இன்னல்களை அனுபவித்து வருகின்றனர். மேலும், தொடக்கக் கல்வித்துறையின் மட்டும் பின்பற்றப்படும் இப்பணிமூப்புப்பட்டியல் நடைமுறையால், நிர்வாகமானது பல்வேறு இடையூறுகளை, இன்னல்களை, வழக்குகளை, முறையீடுகளை அவ்வப்போது சந்தித்தும் வருகிறது. எனவே, கல்வித் துறையின் உயர் அதிகாரிகள் ஒன்றிய அளவிலான பணிமூப்புப் பட்டியல் நடைமுறையில் மாற்றம் தேவை என்பதனை ஏற்றுக் கொள்கின்றனர்.

நான் அறிந்தவரை, தொடக்கக் கல்வித்துறை ஆசிரியர்களுக்கான சங்கங்கள், இந்த ஒன்றிய அளவிலான பணிமூப்புப் பட்டியல் நடைமுறையில் மாற்றத்தை விரும்பவில்லை. இந்தப் பணிமூப்புப் பட்டியல் நடைமுறையால், தொடக்கக் கல்வித்துறையில் ஒரே நாளில் பணியேற்ற ஆசிரியர்களிடையே பதவி உயர்வில் சமநிலையற்றத் தன்மை, பதவி உயர்வு பெற்றவர்கள் விருப்ப மாறுதல் பெற இயலாத முடக்க நிலை, இளையோர் மூத்தோர் முரண்பாடுகள் போன்ற இன்னல்களை ஆசிரியர்கள் சந்தித்து வருவதை அறிந்தும், அவற்றைக் களைவதற்கு அடிப்படையான, ஒன்றிய பணிமூப்புப்பட்டியல் நடைமுறையில் மாற்றத்திற்கான எந்த ஒரு கோரிக்கையினையும் சங்கங்கள் நாளதுவரை முன்னெடுக்கவில்லை. மேலும், தொடக்கக் கல்வித் துறை ஆசிரியப் பேரினத்திற்கு இந்த நடைமுறையால் சமூக அநீதி இளைக்கப்படுவதைச் சங்கங்கள் கண்ணுற்றும், சங்கப் பொறுப்பாளர்களின் சொந்த ஆதாயத்தினை மட்டும் கருத்தில் கொண்டு, இந்நடைமுறையில் மாற்றத்திற்கு முட்டுக்கட்டையாய் இருந்து வருவதும் வேதனை அளிக்கக் கூடிய ஒன்றாகும்.

தொடக்கக் கல்வித்துறையில் பணிபுரியும் நம் ஆசிரியர்களிடையே இந்த ஒன்றிய அளவிலான பணிமூப்புப் பட்டியல் நடைமுறை தொடர்பாகப் பேசும்போது, பலருக்கு இந்த நடைமுறை குறித்து அதிகம் தெரியவில்லை. இன்னும் சிலர், இது தொடக்கக் கல்வித்துறையின் நடைமுறைதானே என வாளாவிருக்கின்றனர். மேலும் பலர், அனைவருக்கும் பதவி உயர்வில் சம வாய்ப்பு கிடைத்திட ஏதுவாக, இந்த நடைமுறையில் மாற்றம் தேவை என்பதை ஏற்றுக்கொள்கின்றனர்; பள்ளிக் கல்வித்துறையில் பின்பற்றப்படும் நியமன நாளின்படியான முன்னுரிமை, பதவி உயர்வு நடைமுறை மற்றும் விருப்ப மாறுதல் நெறிமுறை தொடக்கக் கல்வித்துறை தொடக்க மற்றும் நடுநிலைப்பள்ளித் தலைமையாசிரியர்களுக்கும் ஏனைய ஆசிரியர்களுக்கும் பின்பற்றப்பட வேண்டும் என எதிர்பார்த்திருக்கின்றனர்.

மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகப் பதிவின் அடிப்படையில் மாநில முன்னுரிமைப்படி ஆசிரியர் நியமனம் 2009ல் சாத்தியமானது. பதவி உயர்வு பெற்ற பட்டதாரி ஆசிரியர்கள் மாவட்ட மற்றும் ஒன்றிய மாறுதல் பெறுவது சாத்தியமானது. இன்று தொடக்கக் கல்வித்துறை ஆசிரியர்களுக்கு மாவட்ட மாறுதல் ஆன் லைன் மூலம் மாநில முன்னுரிமைப்பட்டியல் தொகுக்கப்பட்டு வழங்குவது சாத்தியமானது. மேலும் தற்போது தொடக்கக் கல்வித்துறை ஆசிரியர்களின் அனைத்து விவரங்களும் ஆன் லைனில்(EMIS) தொகுக்கப்பட்டுள்ளன. எனவே, அரசுத் துறையில் பணியாற்றும் பணியாளர்கள் மற்றும் பள்ளிக் கல்வித்துறையில் பணியாற்றும் ஆசிரியர்களைப் போன்று தொடக்கக் கல்வித்துறையில் பணிபுரியும் ஆசிரியருக்கும் நியமன நாளின் அடிப்படையில் பணிமூப்புப் பட்டியல் தொகுப்பதும் அதனடிப்படையில் பதவி உயர்வு அளிப்பதும் சாத்தியமே. தொடக்கக் கல்வித்துறையின் நிர்வாக நடைமுறைக்கும் இஃது ஏற்புடையதே.

பதவி உயர்வுத் தளம்(Promotional platform) இல்லா ஆசிரியப் பணிநிலையில், தொடக்கக் கல்வித்துறையில் மட்டும் இன்றளவும் பின்பற்றப்படும் பழைய ஒன்றிய அளவிலான பணிமூப்புப் பட்டியல் நடைமுறையானது கைவிடப்பட வேண்டும். பள்ளிக் கல்வித்துறை ஆசிரியர்களைப் போன்று, தொடக்கக் கல்வித் துறையில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கும் நியமன நாளின் அடிப்படையில் பதவி உயர்வும்; இத்துறையில் பணிபுரியும் தொடக்க மற்றும் நடுநிலைப்பள்ளித் தலைமையாசிரியரும், விருப்ப மாறுதலில் பிற ஒன்றியங்களுக்கு, மாவட்டங்களுக்குச் சென்றிட கதவுகள் திறக்கப்பட வேண்டும். இங்கு சொல்லப்பட்ட கருத்துகளைப் பரவலாக்கும் எண்ணத்திலும்; நான் அறிந்த சில தகவல்களைப் பிறரும் அறிந்துகொள்ள வேண்டும் என்ற நோக்கிலும் அவற்றை கட்டுரை வடிவில் படைத்திட ஆவல் கொண்டேன். இக்கட்டுரையின் ஒவ்வொரு துணைத்தலைப்பிலும் ஒன்றிய அளவிலான பணிமூப்புப் பட்டியலோடான அதன் தொடர்பினையும் தாக்கத்தினையும் விளக்கியுள்ளேன்.

தொடக்கக் கல்வித்துறையில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு மட்டும் பின்பற்றப்பட்டுவரும் இந்த ஒன்றிய அளவிலான பணிமூப்புப் பட்டியல் நடைமுறையினால், தொடக்கக்கல்வித்துறை ஆசிரியச் சமூகம் சந்தித்து வரும் இடர்பாடுகளையும் இழப்புகளையும் மேலும், அதன் பல்வேறு தாக்கங்களையும் இத்துறையில் பணியாற்றும் அனைவரும் அறிந்து கொள்ள வேண்டும். அதன் மூலம் இந்த பழைய நடைமுறையில் மாற்றத்திற்கான தேவையினை ஆசிரியர்கள் உணர்ந்து, மாற்றத்திற்கான முன்னெடுப்பில் இணைந்து முன்வர வேண்டும்.

**மாற்றத்தின் தேவையினை உணர்வோம்;**

**நல்மாற்றத்திற்கான முயற்சியில் ஒன்றிணைவோம்.**

<u>துணைத்தலைப்புச் சட்டகம்</u>


- **ஆரம்பகாலத் தொடக்கக் கல்வி நிர்வாகம் -5**
- **தொடக்கக் கல்வித்துறை**
- **பள்ளிக் கல்வித்துறையில் பணிமூப்புப் பட்டியல் நடைமுறை -6**
- **ஆசிரியரல்லாத பிற பணியாளர்கள் பணிமூப்புப் பட்டியல் -7**
- **தொடக்கக்கல்வித்துறையில் பணிமூப்புப்பட்டியல் தொகுத்தல் -7**
- **ஒன்றிய பணிமூப்புப்பட்டியல் / மாவட்டப்பிரிப்பில் தாக்கம் -8**
- **பணிவரன்முறைப்படுத்துதல்/தகுதிகாண்பருவம் முடித்தல் -10**
- **ஒன்றியத்திற்குள் இரு வேறு பணிமூப்புப் பட்டியல்கள் -10**
- **மாநில அளவிலான முன்னுரிமைப்படி ஆசிரியர் நியமனம் -11**
- **முதல் TRB நியமனத்தவர்க்கு சிறு தளர்வு -11**
- **தேர்வு வாரியத் தர எண் அடிப்படையில் முன்னுரிமை -12**
- **இனவாரி சுழற்சி எண் அடிப்படையில் முன்னுரிமை**
- **தொகுப்பூதிய நியமனம் பெற்றவர்கள் முன்னுரிமை -12**
- **ஆசிரியர் தகுதித் தேர்வும் பணி நியமனமும் -13**
- **பணி நிரவலும் பணிமூப்புப் பட்டியலும் -13**
- **பதவி உயர்வும் பணிமூப்புப் பட்டியலும் -14**
- **தொடக்கக் கல்வி மாறுதல் பதவி உயர்வு கலந்தாய்வு -15**
- **மாவட்ட மாறுதல் பெறுவதில் தடை -16**
- **உதவித் தொடக்கக்கல்வி அலுவலராகப் பதவி உயர்வு -17**
- **தொடக்கக் கல்வித்துறையில் பணி இறக்க நடைமுறை -18**
- **பதவி உயர்வில் சமநிலை அற்றத் தன்மை -19**
- **விதிவிலக்கான பட்டதாரி ஆசிரியர் பதவி உயர்வு நடைமுறை -20**
- **ஒன்றியப்பள்ளிகளில் பட்டதாரி ஆசிரியர் நியமனம்/மாறுதல் -20**
- **ஒன்றியப் பள்ளித் தலைமையாசிரியர் மாறுதல் நடைமுறை -21**
- **இளையோர் மூத்தோர் ஊதிய முரண்பாடுகளைக் களைதல் -22**
- **ஒன்றியப் பணிமூப்புப் பட்டியலில் சங்கங்களின் நிலைப்பாடு -22**
- **மாற்றத்திற்கான வேண்டுகோள் -23**
- **நம்பிக்கை -24**
- **முடிவுரை -25**

**ஆரம்பகாலத் தொடக்கக் கல்வி நிர்வாகம்**

தொடக்கக் கல்விச் சட்டம்-1870 நடைமுறைப்படுத்தப்பட்டதில் தொடங்கி, 1980 வரை தொடக்கக்கல்வியானது உள்ளாட்சி நிர்வாகத்தின் முழுக்கட்டுப்பாட்டில் இருந்து வந்தது. அந்தக் காலக்கட்டத்தில் தொடக்கக்கல்விக்கென, உள்ளாட்சி நிர்வாக நடைமுறையோடு ஊராட்சி / நகராட்சி / மாநகராட்சிக்கு என தனித்தனியே விதிமுறைகளும் வகுக்கப்பட்டன. அவை ஒவ்வொன்றும் தனித்தனி அலகாகக் கருதப்பட்டது. அதன்படி உள்ளாட்சி அமைப்புகள் பள்ளிகளைத் திறப்பது, பள்ளிக்கட்டமைப்பு, ஆசிரியர்கள் நியமனம் போன்றவற்றைப் பொறுப்பெடுத்து நடத்தி வந்தன; அதற்கான செலவீனங்களை தங்கள் நிர்வாகத்தின் வரிவருவாயிலிருந்து மேற்கொண்டும் வந்தன. அக்காலத்தில் கல்விக்கென தனி வரி( Educational Cess) விதிக்கப்பட்டதும் உண்டு. அந்நாட்களில் தொடக்கக் கல்வி ஆசிரியர்களின் நியமன அலுவலர்களாக, ஒன்றியப் பள்ளிகளுக்கு அந்தந்த ஒன்றியத்தின் வட்டார வளர்ச்சி அலுவலரும்; நகராட்சி மற்றும் மாநகராட்சிப் பள்ளிகளுக்கு அந்தந்த நிர்வாக ஆணையர்களும் பொறுப்பேற்று நடத்தி வந்தனர். தங்கள் ஆளுகைக்கு உட்பட்ட பள்ளிகளில் ஆசிரியர்களை அவர்கள் நியமித்துக் கொண்டார்கள். மேலும் அவர்கள் தங்கள் நிர்வாகத்தின் கீழ் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு பதவி உயர்வு மற்றும் பணியிட மாறுதல் அளிக்கும் வசதிக்காக ஒன்றிய / நகராட்சி / மாநகராட்சி அளவில் தனித்தனியே பணிமூப்புப் பட்டியல் பேணி வந்தனர். அந்த நடைமுறை அந்த காலத்திற்கு ஏற்புடையதுதான்.

1981க்குப் பின்னர் ஒன்றியப்பள்ளிகளின் நிர்வாகமானது உள்ளாட்சித் துறையின் நேரடிக் கட்டுப்பாட்டில் இருந்து விடுவிக்கப்பட்டு, பள்ளிக் கல்வி இயக்ககக் கட்டுப்பாட்டின் கீழ் வந்தது. அதன்படி ஒன்றியப் பள்ளி ஆசிரியர்கள் அரசுப்பணியாளர் ஆனார்கள். அதேபோல் 1986ல் நகராட்சி / மாநகராட்சிப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் அந்த நிர்வாகத்தின் கட்டுப்பாட்டில் இருந்து விடுவிக்கப்பட்டு அரசுப் பணியாளர் நிலையினைப் பெற்றார்கள். அதனால் தொடக்கப் பள்ளிகளின் மொத்த நிர்வாகமும் பள்ளிக்கல்வி இயக்ககத்தின் நேரடிக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டது.

**தொடக்கக் கல்வித்துறை**

புதிய கல்விக் கொள்கையின் நடைமுறையினை அடுத்து, 1986ல் பள்ளிக்கல்வி இயக்ககத்தின் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வந்து தொடக்கக் கல்வியானது தனியொரு துறையாக உருப்பெற்றது. அதன்படி தொடக்கப்பள்ளி நிர்வாகம் முழுவதும் தனியே தொடக்கக் கல்வி இயக்ககத்தின் கட்டுப்பாட்டில் செயல்பட தொடங்கியது. அதனைத் தொடர்ந்து தொடக்கக் கல்வி இயக்குநர் பணியிடமும், மாவட்ட அளவில் மாவட்டத் தொடக்கக்கல்வி அலுவலர் பணியிடங்களும் உருவாக்கப்பட்டன. மாவட்டத்தில் பணியாற்றும் அனைத்து ஆசிரியர்களுக்கும் மாவட்டத் தொடக்கக்கல்வி அலுவலரே நியமன அலுவலர் ஆவார். மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலக முன்னுரிமைப்படி ஒன்றிய / நகராட்சி / மாநகராட்சிப் பள்ளிகளில் உள்ள காலிப் பணியிடங்களில், அவரால் ஆசிரியர்கள் மாவட்டத்திற்குள் நியமனம் செய்யப்பட்டனர். அதேபோல் மாவட்டத்தில் உள்ள ஒன்றிய/ வட்டார அளவில் உதவித் தொடக்கக் கல்வி அலுவலர்கள் துணை நிர்வாகப் பொறுப்பேற்றனர். அவர்கள் தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளைப் பார்வையிடுவது, ஆய்வு செய்வதோடு பணியாற்றும் ஆசிரியர்களுக்கு ஊதியம் பெற்று வழங்குவது போன்ற அடிப்படைப்பணிகளை மேற்கொண்டு வந்தனர். அதற்கு முன்பு வரை, அந்தப் பணிகளைப் பள்ளித் துணை ஆய்வாளர்கள் மேற்கொண்டு வந்தனர்.

**பள்ளிக் கல்வித்துறையில் பணிமூப்புப் பட்டியல் நடைமுறை**

பள்ளிக்கல்வித் துறையில் நேரடியாகப் பணி அமர்த்தப்பட்ட ஆசிரியர்களுக்கு நியமன நாளின் அடிப்படையில் பணிமூப்புப் பட்டியல் பேணப்படுகிறது. அவர்கள் வேறு மாவட்டத்திற்குப் பணி மாறுதல் பெற்ற போதும், அவர்களின் நியமன நாளின் அடிப்படையில் அதாவது மாநில அளவிலான முன்னுரிமைப்படியே பதவி உயர்வானது வழங்கப்படுகிறது. அரசின் அனைத்துத் துறைகளிலும் நியமன நாளின் அடிப்படையிலே பதவி உயர்வுக்கான தேர்ந்தோர் பட்டியல் தயாரிக்கப்பட்டு அடுத்தப் பதவி உயர்வு வழங்கப்படுகிறது.

தொடக்கக் கல்வித்துறையில் பணியாற்றிவரும் ஆசிரியர் அலகு மாறுதலில் பள்ளிக் கல்வித்துறைக்கு விருப்ப மாறுதலில் செல்ல நேர்ந்தால் பள்ளிக் கல்வித் துறையில் பணியில் சேர்ந்த நாளின் படியே, அங்குள்ள பணிமூப்புப் பட்டியலில் அவர் இளையராக வைக்கப்படுவார். தொடக்கக் கல்வித்துறையில் உள்ள நடுநிலைப் பள்ளிகள் நிர்வாக நடைமுறையில் அவ்வப்போது குறிப்பிட்ட எண்ணிக்கையில் உயர்நிலைப்பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்படுகின்றன. அத்தகைய நிகழ்வில் நடுநிலைப்பள்ளிகளில் பணியாற்றும் தலைமையாசிரியர் மற்றும் பட்டதாரி ஆசிரியர்கள் சொந்த விரும்பத்தின்படி பள்ளிக்கல்வித் துறைக்கு ஈர்த்துக் கொள்ளப்படுகின்றனர். ஈர்த்துக் கொள்ளப்பட்ட நாள் முதலே அங்குள்ள பணிமூப்புப்பட்டியலில் அவர்கள் இடம் பெற முடியும்.

மேலும், ஆசிரியர் தேர்வு வாரியத்தின் மூலம் ஒரு தேர்வில் தேர்ச்சி பெற்றவர்கள், தர எண் அடிப்படையில் அனைவருக்கும் கல்வி இயக்ககத்திலும் பள்ளிக் கல்வித்துறையிலும் தொடக்கக் கல்வித்துறையிலும் பட்டதாரி ஆசிரியர் பணிநிலையில் பணியமர்த்தப்பட்டுள்ளனர். இவர்களில் தொடக்கக்கல்வித் துறையில் பணியமர்த்தப்பட்டவருக்கு மட்டும் அடுத்த பதவி உயர்வு என்பது நிச்சயமற்ற ஒன்று. மேலும், பட்டதாரி ஆசிரியராகப் பணிபுரியும் பள்ளியானது 15 ஆண்டுகளுக்குப் பின்னர் ஒருவேளை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தப்பட்டு, அவர் பள்ளிக் கல்வித் துறைக்கு ஈர்த்துக்கொள்ளப்பட்டால், இந்த நடைமுறைப்படி அவருடைய முந்தைய பணிக்காலம் முழுமையும் அவரின் அடுத்தபதவி உயர்வுக்கு கணக்கில் கொள்ளப்படாமல் பணிக்கால இழப்பாகவே முடிந்துவிடுகிறது. தொடக்கக் கல்வித்துறையில் இருந்து மாறுதல் பெற்று பள்ளிக் கல்வித்துறைக்குச் சென்றவர்களுக்கே இந்த பணிக்கால இழப்பு நடைமுறை உண்டு.

ஆனால், ஆசிரியப் பயிற்றுநர்களுக்கு இந்த பணிக்கால இழப்பு நடைமுறை பொருந்தாது. அதாவது ஆசிரியப் பயிற்றுநர்களாக நியமனம் பெற்றவர்கள் குறிப்பிட்ட கால இடைவெளியில் பள்ளிக் கல்வித்துறைக்கு ஈர்த்துக் கொள்ளப்படும் நேர்வில் பள்ளிக் கல்வித்துறைக்கு வந்த நாளின் அடிப்படையில் பணிமூப்புப் பட்டியலில் வைக்கப்பட மாட்டார்கள். மாறாக அவர்கள் ஆசிரியப் பயிற்றுநர்களாக நியமனம் பெற்ற நாளின் அடிப்படையில் பணிமூப்புப் பட்டியலில் வைக்கப்படுகின்றனர்.

ஏனென்றால், பள்ளிக் கல்வித் துறையில் பணியில் சேர்கின்ற பட்டதாரி ஆசிரியர் மற்றும் அனைவருக்கும் கல்வி இயக்ககத்தில் பணியில் சேர்கின்ற ஆசிரியப் பயிற்றுநர் இருவருக்கும் நியமன நாளின்படி இணையான பணிமூப்புப் பட்டியல் முறை பேணப்பட்டு வருகிறது. குறிப்பிட்ட எண்ணிக்கையில் ஆசிரியப் பயிற்றுநர்கள் பள்ளிக்கல்வித்துறைக்கு மாற்றப்படும்போது அவரது நியமன நாளின் அடிப்படையில் பள்ளிக்கல்வித் துறையில் உள்ளவர் போல, நேரடியாக முதுகலைப் பட்டதாரியாகவும் பதவி உயர்வுடன் மாறுதல் பெற முடியும்.

**ஆசிரியர் அல்லாத பிற பணியாளர்கள் பணிமூப்புப் பட்டியல்**

தொடக்கக் கல்வித்துறை எனத் தனித்துறையாக உருப்பெற்ற பின் அதற்கென தொடக்கக் கல்வி இயக்ககம், அதன்கீழ் மாவட்ட அளவில் மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலகம், அதனை அடுத்து உதவித் தொடக்கக் கல்வி அலுவலகம் என பல நிர்வாக அலுவலகங்கள் செயல்படுகின்றன. இந்த அலுவலகங்களில் பணியாற்றும் ஆசிரியர் அல்லாத நிர்வாகப் பணியாளர்களுக்கு ஒன்றிய அடிப்படையிலான பணிமூப்புப் பட்டியல் நடைமுறையோ மாவட்ட அளவிலான பணிமூப்புப் பட்டியல் நடைமுறையோ பொருந்தாது. அவர்கள் அனைவருக்கும் நியமன நாளின் அடிப்படையிலே பணிமூப்புப் பட்டியல் பேணப்பட்டு, அதன்படி அவர்கள் அடுத்தடுத்தப் பதவி உயர்விற்கான வாய்ப்பினை முறையாகப் பெற்று வருகின்றனர். அவர்கள் வேறு ஒன்றியத்திற்கோ, வேறு மாவட்டத்திற்கோ மாறுதலில் சென்றாலும், பணிக்கால இழப்பில்லாமல் நியமன முன்னுரிமைப்படி உரிய காலத்தில் அடுத்த பதவி உயர்வுக்கான அழைப்பினையும் பெறுகின்றனர்.

**தொடக்கக் கல்வித் துறையில் பணிமூப்புப்பட்டியல் தொகுத்தல்**

தொடக்கக் கல்வி நிர்வாகமானது ஒன்றிய, நகராட்சி மற்றும் மாநகராட்சிப் பள்ளிகள் உள்ளாட்சி நிர்வாகத்தின் கட்டுப்பாட்டில் இருந்து விடுவிக்கப்பட்டு, 1986 முதல் தொடக்கக் கல்வித்துறைக் கட்டுப்பாட்டின்கீழ் செயல்பட்டு வருகின்றது. அதன்படி மாவட்ட முழுமைக்கும் ஒரே நியமன அலுவலராக மாவட்டத் தொடக்கக்கல்வி அலுவலர் பொறுப்பேற்கிறார். அவரே மாவட்ட அளவில் ஒவ்வோர் ஒன்றியங்களில் பணியாற்றும் ஒன்றிய / நகராட்சி / மாநகராட்சிப் பள்ளி ஆசிரியர்களின் பணிமூப்புப் பட்டியலுக்கான பொறுப்பு அதிகாரியும் ஆவார். ஒன்றிய அளவிலான பணிமூப்புப் பட்டியலை, உதவித் தொடக்கக் கல்வி அலுவலர்கள் அதாவது, வட்டாரக் கல்வி அலுவலர்கள் ஒவ்வோர் ஆண்டும் ஜனவரி முதல் நாளினை அடிப்படையாகக்கொண்டு ஒன்றியத்திலுள்ள அலகுகளின்படி(UNITS) தனித்தனியே தொகுப்பார்கள். மாவட்டக் கல்வி அலுவலர்கள் அதற்கு ஒப்புதல் அளிப்பார்கள்.

தொடக்கக் கல்வித் துறையில் ஓர் ஒன்றியத்தில் நியமனம் பெற்ற ஆசிரியர் அந்த ஒன்றியத்தில் பணியேற்ற நாளினை அடிப்படையாகக் கொண்டு அவ்வொன்றியப் பணிமூப்புப் பட்டியலில் இடம் பெறுவார். ஒரே நாளில் பலர் பணியேற்றால் அவர்களின் பிறந்த நாளினை அடிப்படையாகக் கொண்டு பணிமூப்புப் பட்டியலில் முன்னுரிமை வழங்கப்படும். ஒன்றிய மாறுதல் பெற்று ஒருவர் வந்தால், அவர் தகுதிகாண் பருவம் முடித்தவர் எனில், புதிய ஒன்றியத்தில் அந்நிலையில் தகுதிகாண் பருவம் முடித்தவருள் இளையராகவும்; முடிக்காதவர் எனில், அந்நிலையில் அனைவருக்கும் இளையராகவும் வைக்கப்படுவார்.

இந்தப் பணிமூப்புப் பட்டியல் அடிப்படையிலே, ஓர் ஒன்றியத்திலுள்ள ஆசிரியர்களுக்கு, அந்த ஒன்றியத்தில் ஏற்படும் பதவி உயர்வுக் காலிப் பணியிடங்களில் பதவி உயர்வுக்கான வாய்ப்புகள் மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலரால் அளிக்கப்படுகின்றன. தொடக்கக் கல்வித்துறையில் இந்த ஒன்றிய அளவிலான பணிமூப்புப்பட்டியல் நடைமுறைப்படி முன்னுரிமைப் பட்டியல் தயாரிப்பதிலும், இதிலிருந்து பதவி உயர்வுக்கான தேர்ந்தோர் பட்டியல் தொகுப்பதிலும் சிக்கல்களும் முரண்பாடுகளும் அவ்வப்போது எழுவதும் உண்டு. இத்துறையில் மட்டும் முந்தைய நியமன அலுவலர்களான வட்டார வளர்ச்சி அலுவலர் / ஆணையர் காலத்திற்கு ஏற்புடைய, இப்பணிமூப்புப் பட்டியல் நடைமுறை இன்றளவும் விடாது பின்பற்றப்பட்டு வருகிறது.

**ஒன்றிய பணிமூப்புப் பட்டியலின் தாக்கம்**

தொடக்கக் கல்வித் துறையில் மட்டும் இன்றளவும் ஒன்றிய அளவிலே பணிமூப்புப் பட்டியல் பேணப்பட்டு அவர்கள் பணியாற்றும் ஒன்றிய அளவிலான காலிப்பணியிடங்களில், அவ்வொன்றிய முன்னுரிமைப்படி தேர்ந்தோர் பட்டியல் தொகுக்கப்பட்டு பதவி உயர்வு அவ்வொன்றியத்திலே வழங்கப்படுகிறது. இதனால் ஒரே நாளில் பணியமர்த்தப்பட்டவர்களுக்கு இடையே பதவி உயர்வு பெறுவதில் சம வாய்ப்பு இல்லாத சூழல் நிலவுகிறது.

முன்னர், மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்தின் மூலம் ஆசிரியர்கள் மாவட்டத்திலுள்ள ஏதேனும் ஓர் ஒன்றியத்தில் பணி அமர்த்தப்பட்டனர். இவ்வாறாக வேறு ஒன்றியத்தில் பணியேற்ற ஆசிரியர் பின் நாளில் திருமணம் மற்றும் பிற குடும்பச் சூழல் காரணமாக தங்கள் சொந்த மற்றும் பிற ஒன்றியங்களுக்கு மாறுதல் பெறும் பட்சத்தில், புதிய ஒன்றியத்தில் பணியேற்ற நாளினை அடிப்படையாகக் கொண்டே அவ்வொன்றியப் பணிமூப்புப் பட்டியலில் இளையராக வைக்கப்படுவார். அதாவது மாறுதல் பெற்று வந்த ஆசிரியர் தகுதிகாண் பருவம் முடித்தவர் எனில் தகுதிகாண் பருவம் முடித்தவருள் இளையவராக; முடிக்காதவர் எனில் அனைவரிலும் இளையராக வைக்கப்படுவர். அதாவது பதவி உயர்வுக்கு அவரது முந்தைய பணிக்காலம் கணக்கில் கொள்ளப்படாது. பதவி உயர்வுக்கு எடுத்துக் கொள்ளப்படாத இப்பணிக்கால இழப்பினைக் கருத்தில் கொண்டு, மாறுதல் எதுவும் பெறாமல் பலர் குடும்பத்தினைப் பிரிந்து, பணி நியமனம் பெற்ற ஒன்றியத்திலே இருந்து விடுகின்றனர். ஆனால் இந்த நடைமுறையால் சொந்த ஒன்றியங்களில் பணியமர்த்தப்படுவோர் மற்றும் மாறுதல் பெறாமல் அதே ஒன்றியத்தில் பணியில் இருப்பவர்கள் வெகு விரைவில் அடுத்தடுத்தப் பதவி உயர்வினை பெற முடிகிறது. இதனால் இளையோர் மூத்தோர் முரண்பாடுகளும், பணியில் இளையவர் மூத்தவரை விட அதிக ஊதியம் பெறுகின்ற நிலையும் உருவாகிறது.

**மாவட்ட மறுசீரமைப்பினால் ஏற்படும் இன்னல்கள்**

ஒருவர் தனது சொந் மாவட்டத்தில் உள்ள வேறு ஒன்றியத்தில் பணியமர்த்தப்பட்டு பணியாற்றி வருகின்றார். சில நேர்வில் சொந்த ஒன்றியத்திற்கு அவர் மாறுதல் பெறுவதற்கு முன் பணியாற்றும் ஒன்றியமானது, புதிய வருவாய் மாவட்டப் பிரிப்பிற்குள் வருமாயின், அவர் வேறு மாவட்டத்தில் பணியாற்றும் நிலைக்குத் தள்ளப்படுகின்றார். எடுத்துக்காட்டாக, ஒருங்கிணைந்த திருச்சி மாவட்டத்தில் இருந்து கரூர், பெரம்பலூர் மற்றும் அரியலூர் மாவட்டங்கள் பிரிக்கப்பட்டபோது, பலர் இந்த இன்னல்களைச் சந்திக்க நேர்ந்தது. இவர்கள் தங்கள் சொந்த ஒன்றியங்களுக்கு / மாறுதல் பெற்று வருவது என்பது பலருக்கு எட்டாக் கனியாகவே ஆகிவிடுவதுண்டு. அப்படியே பல ஆண்டு முயற்சிக்குப்பின், அதாவது முதலில் மாவட்ட மாறுதல், அதைத் தொடர்ந்து சொந்த ஒன்றியத்திற்கு மாறுதல் பெற்று வந்தாலும் அவர்கள் அவ்வொன்றியத்தில் பணியேற்ற நாளில் இருந்துதான் பணிமூப்புப் பட்டியலில் இடம்பெற வேண்டியுள்ளது.

அதைவிட வேடிக்கை ஒரு வருவாய் மாவட்டப் பிரிப்பில் ஓர் ஒன்றியம் முழுவதுமாக புதிய மாவட்டத்திற்குள் வந்துவிட்டால் சரி. மாறாக, புதிய வருவாய் மாவட்டப் பிரிப்பில் ஓர் ஒன்றியத்தின் சில பகுதிகள் புதிய ஒன்றியத்தின் வேறோர் ஒன்றியத்தோடு இணைக்கப்பட்டால், பழைய ஒன்றியத்தில் உள்ளவர்கள் புதிதாய் செல்லும் ஒன்றியத்தில் இளையராய் பணிமூப்புப் பட்டியலில் வைக்கப்படும் அவல நிலை இந்த ஒன்றிய பணிமூப்புப் பட்டியல் நடைமுறையால் அரங்கேறுவதும் உண்டு. எடுத்துக்காட்டாக திருநெல்வேலி மாட்டத்தில் இருந்து தென்காசி வருவாய்

மாவட்டம் பிரிக்கப்பட்ட போது மேலநீலிதநல்லூர் ஒன்றியத்தின் சில பகுதிகள் மானூர் ஒன்றியத்துடன் இணைக்கப்பட்டது. அந்த நேர்வில் மேலநீலிதநல்லூர் ஒன்றியத்தில் பணியாற்றி வந்த ஆசிரியர்கள் முன்னர் தாங்கள் பணியாற்றி வந்த ஒன்றியத்தின் பணிக்கால்த்தினை இழந்து புதிய ஒன்றியத்தில் இளையராக வைக்கப்பட்டனர். இதே போன்றதொரு சிக்கல் இராணிப்பேட்டையலும் அரங்கேறியது ஊர் அறிந்ததே. இதற்கெல்லாம் ஒரே தீர்வு பள்ளிக் கல்வித்துறை மற்றும் பிற துறைகள் போல மாநில பணி மூப்புப் பட்டியல் நடைமுறையினை தொடக்கக் கல்வித் துறையிலும் பின்பற் வேண்டும்.

**பணிவரன்முறைப்படுத்துதல்/தகுதிகாண் பருவம் முடித்தல்**

ஒரு பணிநிலையில் பணிமர்த்தப்படும் ஆசிரியர் முதலில் அந்தப் பணிநிலைக்கு உரிய அனைத்துக் கல்வித் தகுதிகளையும் பெற்றுள்ளார் என்பதை ஆராய்ந்து அவர் பணிவரன்முறைப்படுத்தப்படுகிறார். இந்தப் பணியை நியமன அலுவலர்கள் மேற்கொள்கின்றனர். தற்போதைய ஆசிரியப் பணி நியமனங்கள் ஆசிரியர் தேர்வு வாரியத்தின் மூலம் நடைபெறுகின்ற நிலையில், அங்கே அவர்களுக்கு சான்றிதழ் சரிபார்க்கும் பணி முடிவடைந்து விடுவதனால், பணிவரன்முறைப்படுத்துதல் என்பது தனியாக மேற்கொள்ள வேண்டிய தேவை எழுவதில்லை. ஆனால், ஒருவர் பதவி உயர்வு பெற்றால் அந்தப் பணிநிலையில் அவர் மீண்டும் பணிவரன்முறைப்படுத்தப்பட வேண்டும்.

அரசுப் பணியில் சேர்கின்ற ஒவ்வொருவரும் மூன்றாண்டுகளுக்குள் இரண்டாண்டுகள் தகுதிகாண் பருவத்தினை நல்ல முறையில் நிறைவு செய்திருக்க வேண்டும் என்பது அடிப்படை விதி. அதிகாரப் பகிர்வின் அடிப்படையில் தற்போது ஒன்றிய அளவில் பணியாற்றும் ஆசிரியர்கள் தகுதிகாண் பருவம் நல்ல முறையில் நிறைவு செய்தமைக்கு, உதவித் தொடக்கக் கல்வி அலுவலர்களே ஆணை பிறப்பித்து பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகளை மேற்கொள்ளலாம். அரசுப் பணியில் சேர்ந்த ஒருவர் தகுதிகாண் பருவம் முடித்திருந்தால் மட்டுமே அவர் பதவி உயர்வுக்கான தேர்ந்தோர் பட்டியலில் இடம்பெற முடியும்.

தொடக்கக் கல்வித்துறையில் ஒன்றிய அளவிலான பணிமூப்புப்பட்டியல் நடைமுறையால், வேறு ஒன்றியத்திற்கு மாறுதலில் செல்லும் ஆசிரியர், தகுதிகாண் பருவம் முடித்தவர் எனில், புதிய ஒன்றியத்தில் அந்நிலையில் தகுதிகாண் பருவம் முடித்தவருள் இளையராகவும்; முடிக்காதவர் எனில், அந்நிலையில் அனைவருக்கும் இளையராக வைக்கப்படுவார் என்ற உறுதிமொழி ஒவ்வொரு மாறுதல் விண்ணப்பத்திலும் கட்டாயம் இடம் பெற்றிருக்கும். அந்த நடைமுறை இன்றளவும் பின்பற்றப்பட்டு வருகிறது. பல்வேறு காரணங்களால், சிலருக்கு பல ஆண்டுகளாகத் தகுதிகாண் பருவம் உரிய காலத்தில் முடிக்கப்படாமல் இருக்கிறது. சில இடங்களில் தகுதிகாண் பருவம் முடித்த விவரங்கள் தொடர்பான உரிய பதிவுகள் மேற்கொள்ளப்படாத நிலையும் உள்ளது. சில இடங்களில் இதனைக் காரணம்காட்டி, பணிமூப்புப் பட்டியலில் வரிசைப்படுத்துவதில் சுய விருப்பு வெறுப்புகளின் அடிப்படையில் மாறுபட்ட நிலைப்பாடுகள் எடுக்கப்படுவதும் உண்டு.

மேலும், இந்த நடைமுறையால் சில ஒன்றியங்களில் பணியில் சேர்ந்து தகுதிகாண் பருவம் முடிக்கும் முன்னரே, சிலருக்குப் பதவி உயர்வுக்கான கதவுகள் திறந்தே இருக்கின்றன. அவர்கள் தகுதிகாண் பருவம் முடித்த உடனே பதவி உயர்வுக்கான தேர்ந்தோர் பட்டியலில் இடம் பெற்று பதவி உயர்வினைப் பெற

முடிகிறது. வேறு சில ஒன்றியங்களில் பணி ஓய்வு பெறும் நாள்வரை பதவி உயர்வினை கனவிலும் நினைக்க முடியாத நிலை தொடர்கின்றது.

**ஒன்றியத்திற்குள் இரு வேறு பணிமூப்புப் பட்டியல்கள்**

தொடக்கக் கல்வித்துறையில் ஒன்றியப்பள்ளிகள் தனி அலகாகவும், நகராட்சிப் பள்ளிகள் தனி அலகாகவும், மாநகராட்சிப் பள்ளிகள் தனி அலகாகவும் கருதப்படுகின்றன. ஓர் ஒன்றியம்/சரகம் / வட்டாரம் என்பது வருவாய் ஒன்றியங்கள் அடிப்படையிலும் நகரப் பகுதிகளில் நிர்வாக வசதிக்கு ஏற்பவும் பிரிக்கப்பட்டுள்ளன. அந்த பிரிப்பின் அடிப்படையில் நகரப் பகுதிக்கு அருகில் உள்ள சில ஒன்றியத்திற்குள் ஒன்றியப்பள்ளிகள் மட்டும் அல்லாமல் மாநகராட்சிப்பள்ளிகளோ அல்லது நகராட்சிப்பள்ளிகளோ இடம் பெற்றுள்ளன. இந்த ஒன்றியங்களில் ஒன்றியம் முழுமைக்குமான ஒற்றைப் பணிமூப்புப் பட்டியல் பேணப்படுவதில்லை.

மாறாக, இப்படிப்பட்ட ஒன்றியத்திற்குள், ஒன்றியப் பள்ளிகளுக்கென ஒரு பணிமூப்புப் பட்டியலும் மாநராட்சிப் பள்ளிகளுக்கெனத் தனியே ஒரு பணிமூப்புப் பட்டியலும் பேணப்பட்டு வருகின்றன. அதாவது ஓர் ஒன்றியத்திற்குள்ளே இரண்டு பணிமூப்புப் பட்டியல்கள் பேணப்படுகின்றன. இதன்படி ஒன்றியப் பள்ளிகளில் ஏற்படும் காலிப்பணியிடங்களுக்கு ஒன்றியப்பள்ளி ஆசிரியர் முன்னுரிமைப்பட்டியல் படியும்; மாநகராட்சிப் பள்ளிகளில் ஏற்படும் காலிப்பணியிடங்களுக்கு மாநகராட்சிப்பள்ளி ஆசிரியர் முன்னுரிமைப்பட்டியல் படியும் பதவி உயர்வு வாய்ப்புகள் வழங்கப்படுகின்றன.

எடுத்துக்காட்டாக, திருச்சிராப்பள்ளி மாவட்டம் துறையூர் ஒன்றியத்தில் பல ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளும் ஒரே ஒரு நகராட்சித் தொடக்கப்பள்ளியும் உள்ளது. துறையூர் ஒன்றியம் என்று ஓர் அலகாக நிர்வாக அடிப்படையில் கருதப்பட்டாலும், இங்கு ஒன்றியப்பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கென தனியாகப் பணி மூப்புப் பட்டியலும் ஒரே ஒரு நகராட்சிப்பள்ளியில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கென தனியாகப் பணி மூப்புப் பட்டியலும் என இருவேறு பணிமூப்புப் பட்டியல்கள் பேணப்படுகின்றன. இந்நகராட்சித் தொடக்கப்பள்ளியில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு பதவி உயர்வுக்கு ஒரே ஒரு தொடக்கப்பள்ளி தலைமையாசிரியர் பணியிடம் மட்டுமே உண்டு. தற்போதுள்ள நடைமுறைப்படி இங்கு பணியாற்றும் ஆசிரியர்கள் எவ்வளவு கல்வித் தகுதிகள் பெற்றிருப்பினும் வேறு எந்தப் பதவி உயர்வும் பெற இயலாது.

அதே போன்று திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருச்சி மேற்கு சரகத்தில் மானியப் பள்ளிகளும் ஆதி திராவிடர் நலப்பள்ளிகளும் 3 மாநகராட்சிப் பள்ளிகளும் உள்ளன. இந்த சரகத்தினைப் பொருத்தமட்டில் இம்மூன்று நகராட்சிப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு மட்டுமென தனியே பணிமூப்புப் பட்டியல் பேணப்படுகிறது. இந்த பட்டியலில் உள்ள ஆசிரியர்கள் பதவி உயர்விற்கான கல்வித் தகுதிகள் எவ்வளவு பெற்றிருந்தாலும், இம்மூன்று பள்ளிகளில் ஏற்படுகின்ற காலிப்பணியிடங்களில் மட்டும் பதவி உயர்வு வாய்ப்பினைப் பெற முடியும்.

இதே போல, திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை ஒன்றியத்தில் பல ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளும் 4 நகராட்சிப்பள்ளிகளும் உள்ளன. இங்கு ஒன்றியப்பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கென தனியாகப் பணி மூப்புப் பட்டியலும் நான்கு நகராட்சிப்பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கென தனியாகப் பணி மூப்புப் பட்டியலும் ஆக இருவேறு பணிமூப்புப் பட்டியல்கள்

பேணப்படுகின்றன. மேலும், திருச்சிராப்பள்ளி மாவட்டம் அந்தநல்லூர் ஒன்றியத்தில் பல ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளும் 13 நகராட்சிப்பள்ளிகளும் உள்ளன. இங்கு ஒன்றியப்பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கென தனியாகப் பணி மூப்புப் பட்டியலும் நகராட்சிப்பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கென தனியாகப் பணி மூப்புப் பட்டியலும் ஆக இருவேறு பணிமூப்புப் பட்டியல்கள் பேணப்படுகின்றன.

**மாநில அளவிலான முன்னுரிமைப்படி ஆசிரியர் நியமனம்**

ஆசிரியர் பயிற்சியில் சேருவதற்கு, ஆசிரிய மாணவர்களுக்கு கலந்தாய்வு முறையில் வாய்ப்பளிக்கப்பட்டது. அவர்கள் ஆசிரியப் பயிற்சி முடித்தபின் மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகப் பதிவின்படி, அந்தந்த மாவட்டத்தில் ஏற்படும் காலிப்பணியிடங்களில் பணியமர்த்தப்பட்டு வந்தனர். ஒரே நாளில் பயிற்சி முடித்த ஆசிரியர்களில் வட மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் விரைவில் தங்கள் மாவட்டங்களில் பணி நியமன வாய்ப்பு கிடைக்கப் பெற்றனர். ஆனால் அவர்களோடு பயிற்சியினை முடித்த தென் மாவட்டத்தினைச் சேர்ந்தவர்களில் பலருக்கு, அவர்கள் மாவட்டத்தில் 15 ஆண்டுகள் 20 ஆண்டுகள் காத்திருந்தும் வேலைவாய்ப்பு கிடைக்காத நிலை தொடர்ந்தது.

ஆசிரியப் பயிற்சி முடித்தவர்களின் நியமன வாய்ப்பில் சமநிலையற்ற இந்த நடைமுறையால், வேலைவாய்ப்பு அலுவலகப் பதிவின்படி மாநில அளவிலான முன்னுரிமைப்படி(State Leve Seniority) பணியமர்த்தப்பட வேண்டும் எனும் கோரிக்கை வலுப்பெற்றது. அரசு இந்தக் கோரிக்கையினைக் கருத்துடன் பரிசீலித்து, சீர்திருத்த நடைமுறையாக 2009ம் ஆண்டு முதல் ஆசிரியர்கள் மாநில அளவிலான முன்னுரிமைப்படி, மாநிலத்தின் பல்வேறு மாவட்டங்களில் பணியமர்த்தப்பட்டனர். இதனால் ஆசிரியர் பணி நியமனத்தில் சம நீதி மலர வாய்ப்பு ஏற்பட்டது.

**முதல் TRB நியமனத்தவர்க்கு முன்னுரிமை பட்டியலில் சிறு தளர்வு**

தமிழ்நாட்டில் ஆசிரியர் தேர்வு வாரியம் தொடங்கப்பட்டு, அதன் மூலம் மாநிலம் முழுமைக்குமான தேர்வு நடத்தி முதன் முதலாக 1995ல் இடைநிலை ஆசிரியர்கள் அவரவர் மாவட்டங்களில் பணியமர்த்தப்பட்டனர். மாவட்டங்களில் போதிய காலிப்பணியிடங்கள் இல்லாத நிலையில் அருகிலுள்ள மாவட்டங்களில் பணியமர்த்தப்பட்டனர். ஆயினும் தொடக்கக் கல்வித்துறையில் பணியமர்த்தப்பட்ட அவ்வாசிரியர்களின் பணிமூப்புப் பட்டியல் முந்தைய காலத்தைப் போல் ஒன்றிய / நகராட்சி / மாநகராட்சி அளவில் தனித்தனியே பேணப்பட்டது. தேர்வு வாரியத்தின் மூலம் நியமனம் செய்யப்பட்ட இவ்வாசிரியர்கள் பணியில் சேர்ந்த நாளினை அடிப்படையாகக் கொண்டு முன்னுரிமைப் பட்டியல் பேணப்படவில்லை. மாறாக அவர்கள் தர எண் அடிப்படையில் பணிமூப்புப் பட்டியலானது பேணப்பட்டது.

மேலும், சிறு விதி விலக்காக, வேறு மாவட்டத்தில் பணியமர்த்தப்பட்ட இவ்வாசிரியர்கள் ஒரு முறை மாறுதல் பெற்று சொந்த ஒன்றியம் வரவும்; அந்த முறை மட்டும் ஒன்றியத்தில் சேர்ந்த நாளின்படி அல்லாமல், தங்கள் தர எண் அடிப்படையிலே அப்புதிய ஒன்றியத்தில் பணிமூப்புப் பட்டியலில் இடம் பெற வாய்ப்பளிக்கப்பட்டது. அடுத்து அவர்கள் மாறுதல் பெற்றால், ஒன்றிய பணிமூப்புப் பட்டியல் நடைமுறைப்படி புதிய ஒன்றியத்தில் பணியேற்ற நாளின்படி முன்னுரிமைப் பட்டியலில் வைக்கப்பட்டனர்.

**தேர்வு வாரியத் தர எண் அடிப்படையில் முன்னுரிமை**

1995ஐத் தொடர்ந்து 2001க்குப் பின்னர், ஆசிரியர்கள் தேர்வு வாரியத்தின் மூலம் மாநிலம் முழுவதும் நியமனம் செய்யப்பட்டனர். தேர்வு வாரியத்தின் மூலம் தேர்ச்சி பெற்ற இவர்களுக்குத் தேர்வு வாரியத் தர எண் வழங்கப்பட்டது. இவர்களில் தொடக்கக் கல்வித் துறையில் பணியில் சேர்ந்தவர்களுக்கு, பணியில் சேர்ந்த நாளின்படி முன்னுரிமையானது அளிக்கப்படவில்லை. மாறாக, அவர்தம் தர எண் அடிப்படையிலே ஒன்றியத்தில் முன்னுரிமை அளிக்கப்பட்டது. ஆனால், அவர்கள் வேறு ஒன்றியத்திற்கு மாறுதல் பெற்றால், அந்த ஒன்றியத்தில் சேர்ந்த நாளின் அடிப்படையிலே பணிமூப்புப் பட்டியலில் இடம் பெறுவர்.

**இனவாரி சுழற்சி எண் அடிப்படையில் முன்னுரிமை**

ஒன்றியப் பணிமூப்புப் பட்டியல் நடைமுறையானது, பணியேற்ற நாளின்படி இருக்க, வேலைவாய்ப்பு அலுவலகப் பதிவின்படி 1996 முதல் 2001 வரை ஆசிரியர்கள் மீண்டும் அந்தந்த மாவட்டங்களில் பணியமர்த்தப்பட்டனர். ஆனால், இந்த நியமனத்தின் போது இனவாரிசுழற்சி முறை பின்பற்றப்பட்டது. அதன்படி மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர் இவ்வாசிரியர்களுக்கு இனவாரி சுழற்சியுடன் கூடிய முன்னுரிமை வரிசை எண்( Roaster Serial No.) அளித்து பணியமர்த்தினார். இவர்களுக்கான பணிமூப்புப் பட்டியலில் பணியில் சேர்ந்த நாளின் அடிப்படையில் அல்லாமல் மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலரால் அளிக்கப்பட்ட இனவாரி முன்னுரிமை வரிசைப்படி பணி மூப்புப்பட்டியலில் வைக்கப்பட்டனர். அதனை அடுத்து, அவர்கள் வேறு ஒன்றியத்திற்கு மாறுதல் பெற்றால், அந்த ஒன்றியத்தில் சேர்ந்த நாளின் அடிப்படையில் பணிமூப்புப் பட்டியலில் இடம் பெறுவர்.

**தொகுப்பூதிய நியமனம் பெற்றவர்கள் முன்னுரிமை**

1991வரை தொகுப்பூதிய அடிப்படையில் பணியில் சேர்ந்தவர்கள் 01.09.1992 முதல் முறையான ஊதிய விகிதத்திற்குக் கொண்டுவரப்பட்டு பணிவரன்முறைப்படுத்தப்பட்டனர். அதன்படி தொகுப்பூதிய அடிப்படையில் பணியில் சேர்ந்த அனைவருக்கும் 01.09.1992 அன்று அவர்களது முன்னுரிமை நிர்ணயம் செய்யப்படும். அவர்கள் அந்த ஒன்றியத்தில் தொகுப்பூதிய அடிப்படையில் பணியில் சேர்ந்த நாளினை பணிமூப்புப்பட்டியலில் குறிப்பிடாமல் 01.09.1992 என்று குறிப்பிடுவர். ஆயினும் அவர்கள் தொகுப்பூதிய பணிக்காலத்தைக் கணக்கில் கொண்டு பணிமூப்புப்பட்டியலில் வரிசைப்படுத்தப்படுவர். தொகுப்பூதியத்தின்படி ஒரே நாளில் பணியில் சேர்ந்திருந்தால் பிறந்த தேதி கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும்.

அதே போல, 2004 முதல் தொகுப்பூதிய அடிப்படையில் நியமனம் பெற்றவர் அனைவரும் ஆசிரியர் தேர்வு வாரியத்தால் நியமனம் பெற்றவர்கள். அவர்கள் அனைவரும் 01.06.2006 அன்று பணிவரன்முறைப்படுத்தப்பட்டனர். எனவே 01.06.2006 அன்று அவர்களது முன்னுரிமை நிர்ணயம் செய்யப்படும். ஆயினும் முந்தைய நடைமுறைப் போலல்லாமல் அவர்கள் தர எண் அடிப்படையில் முன்னுரிமைப் பட்டியலில் வரிசைப்படுத்தப்படுவர். ஆயினும், அவர்கள் வேறு ஒன்றியத்திற்கு மாறுதல் பெற்றால் அந்த ஒன்றியத்தில் சேர்ந்த நாளின் அடிப்படையிலே பணிமூப்புப் பட்டியலில் இடம் பெறுவர்.

**ஆசிரியர் தகுதித் தேர்வும் பணி நியமனமும்**

வேலைவாய்ப்பு அலுவலக முன்னுரிமைப்படி ஆசிரியர் பணி நியமனம் என்பது இனி வருங்காலங்களில் சாத்தியமில்லாத ஒன்றாகிப் போனது. ஏனெனில் ஆசிரியர் தேர்வு வாரியத்தின் மூலம் மட்டுமே ஆசிரியர் நியமனம் என்பது நடைமுறைக்கு வந்ததுடன், மத்திய அரசின் கல்விக் கொள்கையின்படி, 2012 முதல் ஆசிரியர் தகுதித் தேர்வு கட்டாயமாக்கப்பட்டது. இதன்படி தகுதித் தேர்வில் தேர்ச்சி பெற்ற இடைநிலை மற்றும் பட்டதாரி ஆசிரியர்கள் தேர்ச்சித் தர எண் அடிப்படையில் பட்டியல் இடப்பட்டு மாநில அளவிலான காலிப் பணியிடங்களில், கலந்தாய்வு முறையில் பணியமர்த்தப்பட்டு வருகின்றனர். அவ்வாறு தொடக்கக் கல்வித்துறையில் பணியமர்த்தப்பட்ட ஆசிரியர்கள் தர எண் அடிப்படையில் முன்னுரிமைப் பட்டியலில் வரிசைப்படுத்தபடுகின்றனர். ஆயினும், ஒன்றிய அளவிலான பணிமூப்புப் பட்டியல் நடைமுறைப்படி ஒரே தேர்வு மூலம் ஒரே நாளில் பணியமர்த்தப்பட்ட இவர்களுக்கு, ஒரு சில ஒன்றியங்களில் விரைவிலும்; சில ஒன்றியங்களில் தாமதமாகவும் பதவி உயர்வுக்கான வாய்ப்பு கிடைக்கிறது. மேலும், அவர்கள் சொந்த மாவட்டங்களுக்கு / ஒன்றியத்திற்கு மாறுதல் பெற்றால், அந்த ஒன்றியத்தில் சேர்ந்த நாளின் அடிப்படையிலே புதிதாகப் பணிமூப்புப் பட்டியலில் இடம் பெறுவர். அவர்கள் முந்தைய பணிக்காலத்தை இழக்கவும் நேர்கிறது.

**பணி நிரவலும் பணிமூப்புப் பட்டியலும்**

அரசின் நிதி நிலையின் காரணமாக ஆசிரியர் மாணவர் விகிதாச்சாரத்திற்கேற்ப ஒவ்வொரு பள்ளி அளவிலும் உபரி ஆசிரியப் பணியிடங்கள் கணக்கிடப்பட்டன. 2011க்குப் பின்னர் உபரி ஆசிரியர்கள் அந்த மாவட்டங்களுக்குள்ளே பணி நிரவல் செய்யப்பட்டனர். பள்ளிக் கல்வித்துறையைப் பொருத்தமட்டில் நியமன நாளின் அடிப்படையில் பணிமூப்புப் பட்டியல் பேணப்படுவதால் அவர்களுக்கு எந்த பாதிப்பும் இல்லை. மாறாகத் தொடக்கக் கல்வித் துறையில் ஒன்றியப்பள்ளிகள், நகராட்சிப்பள்ளிகள், மாநகராட்சிப்பள்ளிகள் தனித்தனி அலகாகக்(UNIT) கருதப்படுகின்றன. ஆயினும் பள்ளி அளவில் உபரியாகக் கணக்கிடப்பட்ட ஆசிரியர்கள் அவர்தம் பணியிடங்களுடன் அந்த ஒன்றியத்திலுள்ள ஒன்றியப் பள்ளிகளுக்குள் நிரவல் செய்யப்பட்டனர். மேலும் உபரிப் பணியிடங்கள் இருப்பின் அவ்வொன்றியத்தில் உள்ள நகராட்சிப்பள்ளிகளுக்கு நிரவப்பட்டன. அதே போல் நகராட்சிப்பள்ளிகளின் உபரிப் பணியிடங்கள் ஒன்றியப்பள்ளிகளுக்கு நிரவப்பட்டன. இப்பணிநிரவலின்போது ஒன்றியப்பள்ளிகள், நகராட்சிப்பள்ளிகள் தனித்தனி அலகு என்பதெல்லாம் கருத்தில் கொள்ளப்படவில்லை. ஓர் ஒன்றியத்தில் அதற்கும் மேலும் உபரிப் பணியிடங்கள் இருந்தபோது, அந்த உபரி ஆசிரியர்கள், மாவட்டத்திற்குள் ஓர் ஒன்றியத்தில் இருந்து மற்றோர் ஒன்றியத்திற்கு நிரவல் செய்யப்பட்டனர். அவ்வாறு பணிநிரவல் செய்யப்பட்ட ஆசிரியர்கள், மாறுதல் பெற்ற ஒன்றியத்திலோ அல்லது முன்னர் பணியாற்றிய ஒன்றியத்திலோ பேணப்படும் பணிமூப்புப் பட்டியலில் அவர்களின் விருப்பத்தின்படி(Option) தங்கள் பெயரை இணைத்துக்கொள்ள வாய்ப்பு அளிக்கப்பட்டது.

இதற்குக் காரணம், முன்பு பணியாற்றிய ஒன்றியத்தில் காலிப் பணியிடம் ஏற்படும் பட்சத்தில் பணி நிரவலில் வேறு ஒன்றியங்களுக்குச் சென்றவர்கள் சொந்த ஒன்றியங்களுக்குத் திரும்பிட முன்னுரிமை அளிக்கப்பட்டது. ஆனால் அந்தக் கனவும் கானல் நீராகிப் போனது. அதுவரை தொடக்கக் கல்வித்துறை

ஆசிரியர்களின் பணி நிரவலின் போது, ஒன்றியத்தில் இளையவர்கள் நிரவல் செய்யப்பட்டு வந்ததற்கு மாறாக, 2019ம் ஆண்டின் துவக்கத்தில் அந்தந்தப் பள்ளி அளவில் உபரிப்பணியிடங்கள் கணக்கிடப்பட்டு, அப்பள்ளியில் இளையவர்கள் அம்மாவட்டத்தில் உள்ள பல்வேறு அங்கன்வாடிகளில் மாற்றுப்பணியில் பணியாற்றிட அனுப்பப்பட்டனர். சில மாதங்களுக்குப் பின்னர் அவர்கள் மாவட்டத்திற்குள் நிரவல் செய்யப்பட்டனர். அதைவிட வேதனைக்குரிய ஒன்று, அடுத்து நடந்த அந்த ஆண்டின் பொது மாறுதல் கலந்தாய்வின் போது, ஒன்றிய அளவிலான காலிப்பணியிடங்களுக்குப் பணிநிரவலில் சென்ற ஆசிரியர்களுக்கு மீண்டும் தங்கள் ஒன்றியத்திற்கே திரும்ப வருவதற்கான முன்னுரிமை மறுக்கப்பட்டது. மாறாக ஒன்றிய முன்னுரிமைப்படியே வேறு ஒன்றியத்தின் ஆசிரியர்களுக்கு மாறுதல் வாய்ப்பு வழங்கப்பட்டது.

**பதவி உயர்வும் பணிமூப்புப் பட்டியலும்**

ஒரு பணி நிலையில் சேருகின்ற ஒவ்வொரு அரசுப் பணியாளருக்கும் அடுத்தடுத்த பதவி உயர்வுக்கான வாய்ப்புகள் உண்டு. ஆனால், ஆசிரியர்களுக்கு பொதுவாக அப்படிப்பட்ட பதவி உயர்வு வாய்ப்புகள் (Promotional platform) இல்லை. 1988க்குப் பின்னர்தான் பதவி உயர்வுப் பணியாகத் தொடக்கப் பள்ளித் தலைமையாசிரியர் பதவி உருவாக்கப்பட்டது. தொடக்கப்பள்ளி ஆசிரியர்களுக்கு கல்வித் தகுதி அடிப்படையில் மட்டுமே தமிழாசிரியர், பட்டதாரி ஆசிரியர், நடுநிலைப்பள்ளித் தலைமையாசிரியர் போன்ற பதவி உயர்வுப் பணிகள் வழங்கப்படுகின்றன. தகுதி அடிப்படையில் பதவி உயர்வினை எதிர்நோக்கிய ஒரு கனவு, அனைத்து ஆசிரியருக்கும் இருப்பது நிச்சயம். அதற்காக தொடர்ந்து படித்து வருவதும்; தங்களின் அடிப்படைக் கல்வித் தகுதியினை உயர்த்திக் கொள்வதும்; ஆசிரியப் பணிக்கு ஏற்புடையதே.

ஒரு பணியாளர் எவ்வளவு கல்வித் தகுதிகள் பெற்றிருந்தாலும், அவரின் அடுத்த பதவி உயர்வுக்கு பணிமூப்புப் பட்டியலே அடிப்படை ஆகும். ஆனால், இந்தப் பணிமூப்புப் பட்டியல் பேணும் நடைமுறை தொடக்கக் கல்வித்துறையில் ஒரு மாதிரியாகவும், பள்ளிக் கல்வித்துறையில் வேறு மாதிரியாகவும் பின்பற்றப்பட்டு வருகிறது. நிர்வாக அடிப்படையில் தொடக்கக் கல்வித்துறை எவ்வளவோ மாற்றங்களைக் கண்டுள்ள போதும், அன்றைய வட்டார வளர்ச்சி அலுவலர் / நகராட்சிஆணையர் காலத்திற்கு ஏற்புடைய, ஒன்றிய அளவிலான பணிமூப்புப் பட்டியல் பேணும் நடைமுறையானது இன்றளவும் இத்துறையில் கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

தற்போதைய பணி நியமனத்தில் பெரும்பாலான ஆசிரியர்கள் உயர்கல்வித் தகுதியுடனே கீழ் நிலைப்பணியில் சேர்கின்றனர். அவர்களுக்கு ஒன்றிய முன்னுரிமைப்படி பணியாற்றும் ஒன்றியத்தில் வாய்ப்பு கிடைத்தால் மட்டுமே, பட்டதாரி ஆசிரியராக பதவி உயர்வு பெற முடியும். அதுவும் தனது கல்வித் தகுதிக்கேற்ற பட்டதாரிப் பணியிடங்கள் அந்த ஒன்றியத்தில் இருந்தால் மட்டுமே பதவி உயர்வினை எதிர்பார்த்து காத்திருக்கலாம். அவர் கல்வித் தகுதிக்கு ஏற்ற பணியிடங்கள் அவ்வொன்றியத்தில் இல்லையேல், இறுதிவரை இடைநிலை ஆசிரியராகத்தான் பணியாற்ற வேண்டும்.

இவ்வாறாக பதவி உயர்வு ஏதும் கிடைக்கப் பெறாமல் ஒரே நிலையில் பணியாற்றும் ஆசிரியர்களுக்காகவே தேர்வு நிலை மற்றும் சிறப்பு நிலை ஊதியங்கள் வழங்கப்பட்டன. மற்ற துறை சார்ந்த அரசுப்பணியாளர்களுக்கு தேர்வு நிலை மற்றும் சிறப்பு நிலை ஊதியங்கள் அன்று வழங்கப்படவில்லை. ஏனென்றால்,

அவர்களுக்குப் பதவி உயர்வுக்கான வாய்ப்புகள் (promotional platform) உண்டு. பதவி உயர்வுக்கான வாய்ப்புகள் இருந்தும், அவர்களில் சிலர் பதவி உயர்வினை தற்காலிகமாக துறப்பதனால், அவர்களும் ஒரே நிலையில் 10 ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றும் நிலை வந்தது. எனவே அவர்களுக்கும் தேர்வு நிலை மற்றும் சிறப்பு நிலை ஊதியம் 1978க்குப் பின்னரே வழங்கப்பட்டது.

**தொடக்கக் கல்வித்துறை மாறுதல் பதவி உயர்வு கலந்தாய்வு**

தொடக்கக் கல்வித்துறை மாறுதல் மற்றும் பதவி உயர்வுக் கலந்தாய்வு ஒவ்வோர் ஆண்டும் நடத்தப்பட்டு வருகிறது. இந்த மாறுதல் கலந்தாய்வுக்கென நெறிமுறைகள் வகுக்கப்படுகின்றன. இந்த நெறிமுறைகளில் கண்டிப்பாக ஒன்றிய பணிமூப்புப் பட்டியல் பேணும் கருத்துகள் தவறாமல் இடம் பெறுவது உண்டு. ஆயினும் ஒன்றிய அளவிலான பணிமூப்புப் பட்டியலில் முன்னுரிமைப்படுத்துவது, பதவி உயர்வுக்கான நாடுநர் பட்டியல் தொகுப்பதில் பல கால கட்டங்களில் பல்வேறு குழறுபடிகள், விதி மீறல்கள், முரண்பாடுகள் நிகழ்வதும்; அது தொடர்பான முறையீடுகள் தனிப்பட்ட முறையிலும் சங்கங்கள் வாயிலாகவும் எழுப்பப்பட்டதை அடுத்து அதற்குத் தீர்வு காணப்படுவதும் உண்டு. இது தொடர்பாக தொடக்கக் கல்வித்துறை இயக்குநர்கள் அவ்வப்போது நெடிய தெளிவுரைகள் வழங்கியதும் உண்டு. குறிப்பாக தொடக்கக் கல்வித்துறையில் முன்னுரிமைப் பட்டியல் மற்றும் நாடுநர் பட்டியல் தொகுத்தல் தொடர்பாக தொடக்கக் கல்வித்துறை இயக்குநரின் 2001 மற்றும் 2004ம் ஆண்டு செயல்முறைகளில், இது தொடர்பாக விரிவான தெளிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

ஒவ்வோர் ஆண்டும் மாறுதல் நெறிமுறைகளின்படி தொடக்கக் கல்வித்துறையில் மாறுதல் மற்றும் பதவி உயர்வுக் கலந்தாய்வு பல கட்டங்களாக நடைபெறும்.

## I- *மாநில அளவில்*

*உதவித் தொடக்கக்கல்வி அலுவலர் பதவி உயர்வு*

மாறுதல் நெறிமுறைகளின்படி உதவித் தொடக்கக் கல்வி அலுவலர் பதவி உயர்வுக்கு ஒன்றிய / நகராட்சி / மாநகராட்சி நடுநிலைப் பள்ளிகளில் துறைத்தேர்வு முடித்து, தலைமை ஆசிரியர்களாகப் பணியாற்றுவோரில் அவர்கள் தலைமையாசிரியர் பதவி ஏற்ற நாளின் அடிப்படையில் மாநில அளவிலான முன்னுரிமைப்படி தேர்ந்தோர் பட்டியல் தொகுக்கப்பட்டு இப்பதவி உயர்வு அளிக்கப்படுகிறது.

தற்போது இப்பதவி வட்டாரக் கல்வி அலுவலர் பதவி என மாற்றப்பட்டுள்ளது. ஒன்றிய பணிமூப்புப் பட்டியல்படி ஒன்றியத்திற்குள் தலைமையாசிரியர் பதவி உயர்வு அளிக்கப்படுவதால், இப்பதவி உயர்வினை, ஒருவர் பணி சேர்ந்த சில ஆண்டுகளிலும்; வேறு சிலர் பல ஆண்டுகளுக்குப் பின்னர்தான் பெற முடிகிறது.

## II- *ஒன்றிய அளவில்*

அ) ஒன்றிய நடுநிலைப்பள்ளி தலைமையாசிரியர் மாறுதல்
ஆ) ஒன்றிய நடுநிலைப்பள்ளி தலைமையாசிரியர் பதவி உயர்வு
இ) ஒன்றிய பட்டதாரி ஆசிரியர் மாறுதல் ஈ) ஒன்றிய அளவில் பட்டதாரி ஆசிரியர் பதவி உயர்வு உ) ஒன்றிய தொடக்கப்பள்ளி தலைமையாசிரியர் மாறுதல்

ஊ) ஒன்றிய தொடக்கப்பள்ளி தலைமையாசிரியர் பதவி உயர்வு
எ) ஒன்றிய அளவில் இடைநிலை ஆசிரியர்கள் மாறுதல்

## III- *ஒன்றியம் விட்டு ஒன்றியம்*

அ) மாவட்டத்திற்குள் பட்டதாரி ஆசிரியர்கள் ஒன்றியம் விட்டு ஒன்றிய மாறுதல்
ஆ) இடைநிலை ஆசிரியர் ஒன்றியம் விட்டு ஒன்றிய மாறுதல்

ஒன்றிய பணிமூப்புப் பட்டியல்படி ஒன்றியத்திற்குள் தலைமையாசிரியர் பதவி உயர்வு அளிக்கப்படுவதால், தொடக்க மற்றும் நடுநிலைப்பள்ளி தலைமையாசிரியர்கள் ஒன்றியம் விட்டு ஒன்றிய மாறுதல் கோர முடியாது.

## IV-*மாவட்டம் விட்டு மாவட்டம்*

அ) பட்டதாரி ஆசிரியர்கள் மாவட்ட மாறுதல்
ஆ) இடைநிலை ஆசிரியர் மாவட்ட மாறுதல்

இந்த மாவட்ட மாறுதல் முந்தைய நாட்களில் ஒரு மாவட்டத்திற்கான காலிப் பணியிடங்களில் குறிப்பிட்ட விழுக்காடு நேரடி நியமனத்திற்கு ஒதுக்கப்பட்டு, மீதமுள்ள இடங்களுக்கு மாவட்ட மாறுதல் வாய்ப்பு அளிக்கப்பட்டது. 2009க்குப் பின் ஆசிரியர்கள் மாநில முன்னுரிமைப்படியும் தேர்வு வாரியத்தின் மூலமாகவும் மாநிலம் முழுமைக்கும் நியமனம் செய்யப்படுவதனால், இந்த மாவட்ட நேரடி நியமன விழுக்காடு கணக்கில் கொள்ளப்படுவதில்லை. தொடக்க மற்றும் நடுநிலைப்பள்ளி தலைமையாசிரியர்கள் மாவட்ட மாறுதல் கோர முடியாது.

மேலும் தற்போது ஆன் லைன் மூலம் மாறுதல் கலந்தாய்வு நடத்தப்படுவதனால் மாவட்ட மாறுதலுக்கு ஆசிரியர்கள் கடைசியாகப் பெற்ற மாறுதல் நாளை அடிப்படையாகக் கொண்டு மாநில முன்னுரிமைப்பட்டியல் தொகுக்கப்பட்டு மாறுதல் வாய்ப்பு வழங்கப்படுகிறது.

**மாவட்ட மாறுதல் பெறுவதில் தடை**

மாநிலம் முழுமைக்குமான நியமனத்தால் வட மாவட்டங்களில் உள்ள மிகுதியான காலிப்பணியிடங்களில் ஆசிரியர்கள் புதிதாக நியமிக்கப்பட்டனர். அவர்கள் ஓராண்டுக்குப்பின் சொந்த மாவட்டங்களுக்கு மாறுதல் பெறுகின்ற காரணத்தால், தொடர்ந்து வட மாவட்டங்களில் அதிகப்படியான காலிப்பணியிடங்கள் உருவாகின்றன. இதைக் குறைக்கும் நோக்கில் 2009க்குப் பின் புதிதாக நியமன ஆணை பெற்றவர்கள் அடுத்து வரும் ஆண்டுகள் மாவட்ட மாறுதல் கோரமுடியாதபடி தடை விதிக்கப்பட்டது. ஆனால், அதற்கு அடுத்து வந்த ஆண்டுகளில் நியமனம் பெற்றவர்களிடம் மாவட்ட மாறுதல் பெறுவதில் தடை இல்லை. எனவே அவர்கள் மாவட்ட மாறுதல் பெற்று வேறு ஒன்றியங்களுக்குச் சென்று அந்த ஒன்றிய முன்னுரிமையும் பெற முடிந்தது. முந்தையவர்களுக்கு இருந்த தடை பல்வேறு முயற்சிகளைத் தொடர்ந்து விலக்கிக் கொள்ளப்பட்டது. ஆன் லைன் முறையில் வெளிப்படையான கலந்தாய்வு நடைமுறையால் ஒருவர் தனக்குரிய வாய்ப்பு முறையாக வரும் எனக் காத்திருக்கும் நிலையில், நிர்வாக மாறுதல் என்ற பெயரில் பலர் மாறுதல் பெற்று பல ஒன்றியங்களில் மூத்தவர் என்ற நிலையினை எய்துகின்றனர்.

அதைப் போல, 2018ம் ஆண்டு பொது மாறுதல் கலந்தாய்வின்போது கிருஷ்ணகிரி, தருமபுரி, திருவண்ணாமலை போன்ற குறிப்பிட்ட 8 வட

மாவட்டங்களில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு மட்டும் வேறு மாவட்டங்களுக்கு மாறுதலில் செல்ல தடைவிதிக்கப்பட்டது. இவர்களில் வேறு மாவட்டத்தினைச் சேர்ந்தவர்கள் பின் நாளில் மாவட்ட மாறுதல் பெற்று வேறு மாவட்ட ஒன்றியத்திற்கு எப்போது செல்வாரோ, அன்று முதல்தான் அவர் அந்த ஒன்றியத்தின் பணிமூப்புப் பட்டியலில் இடம் பெற முடியும். அதன் அடிப்படையிலே அவரின் அடுத்த பதவி உயர்வுக்கான முன்னுரிமை நிர்ணயிக்கப்படும்.

**உதவித் தொடக்கக்கல்வி அலுவலராகப் பதவி உயர்வு**

பள்ளிக் கல்வித்துறையைச் சார்ந்த பட்டதாரி ஆசிரியர்கள் முன்னர் பள்ளித் துணை ஆய்வாளர்களாக பணியாற்றி வந்தனர். பள்ளிக் கல்வித்துறையினைச் சேர்ந்த ஒருவர், பள்ளித்துணை ஆய்வாளர்களாக தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளைப் பார்வை மற்றும் ஆய்வு செய்யும் போது, தொடக்கக் கல்வித்துறை நடைமுறையில் அவர்களிடம் இருந்த புரிதல் சார்ந்த குறைகளைச் சங்கங்கள் சுட்டிக் காட்டி, அதற்குரிய கல்வித் தகுதிகளுடன் தொடக்கக் கல்வித்துறையில் பணியாற்றும் நடுநிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களே இந்தப் பணியினை மேற்கொள்ள கோரிக்கை வைத்தன. அதன்படி அப்பணியிடங்கள் 1995க்குப் பின்னர் உதவித் தொடக்கக் கல்வி அலுவலர் பணியிடங்கள் எனப் பெயர் மாற்றம் பெற்றதோடு, தொடக்கக் கல்வித்துறையில் பணியாற்றும் ஒன்றிய /நகராட்சி/மாநகராட்சியின் நடுநிலைப்பள்ளி தலைமையாசிரியர்கள் உதவித் தொடக்கக் கல்வி அலுவலர்களாகப் பணி நிலை மாற்றம் பெற்றனர். 2018 முதல் உதவித் தொடக்கக் கல்வி அலுவலர் பதவியானது, வட்டாரக் கல்வி அலுவலர் என பெயர் மாற்றம் பெற்றதுடன், தற்போது நடுநிலைப்பள்ளி தலைமையாசிரியர் பணிநிலைக்கு அடுத்த, பதவி உயர்வுப்பணியாக மாற்றப்பட்டுள்ளது.

ஒன்றிய அளவிலான பணிமூப்புப் பட்டியலுக்கு மாவட்டக் கல்வி அலுவலர்கள் ஒப்புதல் அளிக்கும் அதிகாரத்தில் இருந்தாலும், இந்தப் பட்டியலினை ஒன்றிய அளவில் தொகுக்கின்ற முக்கிய பொறுப்பு உதவித் தொடக்கக் கல்வி அலுவலரிடமே உள்ளது.

நடுநிலைப்பள்ளி தலைமையாசிரியர்களில் துறைத்தேர்வு முடித்தவர்கள் பட்டியல் மாநில அளவில் பெறப்பட்டு, அவர்களின் நியமன நாளின் அடிப்படையில் தேர்ந்தோர் பட்டியல் தொகுத்து, துறையில் பணியாற்றிவரும் மூத்த ஆசிரியர்களுக்கு இப்பணி வாய்ப்பினை தந்திருக்கலாம். மாறாக, நடுநிலைப் பள்ளி தலைமையாசிரியர்களாக பணியேற்ற நாளின்படி மாநில முன்னுரிமைப் பட்டியல் தயாரிக்கப்படுகிறது. அதன் அடிப்படையிலே உதவித் தொடக்கக் கல்வி அலுவலர் பணிக்கான தேர்ந்தோர் பட்டியல் தொகுக்கப்படுகிறது. ஒன்றிய நடுநிலைப்பள்ளி தலைமையாசிரியர்கள், தாம் பணியாற்றிய ஒன்றிய முன்னுரிமைப்படியே அப்பதவி உயர்வினை பெறுகின்றனர். இதனால், ஆசிரியர் பணியில் சேர்ந்த ஒருவர், ஒன்றிய முன்னுரிமைப்படி 5 ஆண்டுகள் முடித்த நிலையில்; மற்றொருவர் 15 ஆண்டுகள் முடித்த நிலையில்; வேறொருவர் 25 ஆண்டுகள் முடித்த நிலையில் நடுநிலைப்பள்ளி தலைமையாசிரியராக பதவி உயர்வு பெறுகின்றனர். ஓர் ஆண்டின் உதவித் தொடக்கக் கல்வி அலுவலர் பதவி உயர்வுக்கான தேர்ந்தோர் பட்டியல் ஒன்றினை சற்று உற்று நோக்கினாலே இந்நிலையினை நன்கு புரிந்து கொள்ள முடியும். அதாவது ஒன்றிய முன்னுரிமைப்படி, சில ஒன்றியங்களில் பணியில் சேர்ந்தவர்கள் எளிதில் பதவி உயர்வு பெற்று, விரைவில் உதவித் தொடக்கக் கல்வி அலுவலர்களாகப் பணிநிலை மாற்றம் பெறுகின்றனர். எனவே, ஒன்றிய அளவிலான பணிமூப்புப்பட்டியல் அடிப்படையில் நடுநிலைப்பள்ளித் தலைமையாசிரியராகப் பணியேற்ற நாளின்படி மாநில முன்னுரிமைப்பட்டியல்

தொகுத்து, உதவித் தொடக்கக் கல்வி அலுவலர் பதவி உயர்வு அளிப்பது ஏற்புடையதாக இல்லை. இது அனைவருக்கும் சம நீதி எனும் கருத்திற்கு மாறுபட்ட நிலையாகும். மேலும் பள்ளிக் கல்வித்துறையின் உயர்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்க்கான பதவி உயர்வில் குறிப்பிட்ட விழுக்காடு உதவித் தொடக்கக் கல்வி அலுவலர்களுக்குத் தர வேண்டும் என்பது, இவர்களின் அடுத்த கோரிக்கையாகவும் உள்ளது.

தற்போது உதவித் தொடக்கக் கல்வி அலுவலர் பணியிடங்களில் குறிப்பிட்ட விழுக்காடு பதவி உயர்வின் மூலமாகவும், மீதமுள்ளவை நேரடி நியமனமாகவும் நிரப்பப்படுகிறன்றன. இப்பணிக்கான அடிப்படைக் கல்வித் தகுதி ஆசிரியர் கல்வியியல் இளநிலைப் பட்டப்படிப்பு(B.Ed.) ஆகும். எனவே, இப்பணிக்கான நேரடி நியமனத்தில், இப்பணிக்கான கல்வித் தகுதிகளுடன் துறைத்தேர்வுகளை முடித்து, தொடக்கக் கல்வித் துறை மற்றும் பள்ளிக் கல்வித்துறையில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு போட்டித் தேர்வு மூலம் வாய்ப்பு அளித்திடவும் வேண்டும்.

**தொடக்கக் கல்வித்துறையில் பணி இறக்க நடைமுறை**

உதவித் தொடக்கக் கல்வி அலுவலராகப் பணியாற்றும் ஒருவர் தனது பதவியைத் துறந்து மீண்டும் நடுநிலைப்பள்ளி தலைமையாசிரியராக விருப்பம் தெரிவிக்க முடியும். அப்படி பதவி இறங்க விரும்பும் ஒருவர், முன்பு பணியாற்றிய அதே ஒன்றியத்திலே மீண்டும் நடுநிலைப் பள்ளித் தலைமையாசிரியராகப் பொறுப்பேற்க முடியும். அப்படி பதவியினைத் துறந்து வரும் சூழலில், அந்த ஒன்றிய அளவில் அப்பணி நிலையில் இளையவரைப் பணி இறக்கம் செய்து, இவர்கள் பணியமர்த்தப்படுவார்கள். இந்த இளையவர் பணி இறக்கம், அந்த ஒருவரோடு நின்று விடுவதில்லை. மாறாக தொடர் சங்கிலி போல் அடுத்தடுத்தக் கீழ்நிலையில் உள்ளவர்களும் பணியிறங்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். அதனால் அவ்வொன்றிய பணிமூப்புப் பட்டியலில் பெரிய அளவில் மாற்றம் ஏற்படுவதுண்டு.

மேலும், நிர்வாக அடிப்படையில் தொடக்கக் கல்வித்துறையில் உள்ள நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்பட்டு வருகின்றன. அவ்வாறு தரம் உயர்த்தப்படும் நிலையில், அப்பள்ளிகளில் பணியாற்றி வரும் தலைமையாசிரியர், பட்டதாரி ஆசிரியர் மற்றும் இடைநிலை ஆசிரியர்கள் உயர்நிலைப்பள்ளிகளுக்கு ஈர்த்துக் கொள்ளப்பட்டனர். நடுநிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள் பட்டதாரி ஆசிரியர்களாகவே ஈர்த்துக் கொள்ளப்படுவர் என்றதனால், அவர்கள் பொரும்பாலும் உயர்நிலைப்பள்ளிகளுக்குச் செல்ல விருப்பம் தெரிவிப்பதில்லை. 2006க்கு பின்னர் பள்ளிக் கல்வித்துறையில் இடைநிலை ஆசிரியர்களைப் பணியமர்த்துவதில்லை எனக் கொள்கை முடிவெடுக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து தரம் உயர்த்தப்படும் பள்ளிகளில் பணியாற்றும் இடைநிலை ஆசிரியர்கள் உயர்நிலைப்பள்ளிகளுக்கு ஈர்த்துக்கொள்ள அனுமதிக்கப்படவில்லை.

தரம் உயர்த்தப்பட்ட பள்ளிகளில் பணியாற்றிவரும் பட்டதாரி ஆசிரியர்கள் மட்டும் உயர்நிலைப்பள்ளிகளுக்கு ஈர்த்துக் கொள்ளப்பட்டு வருகின்றனர். அவர்களிலும் சிலர் உயர்நிலைப்பள்ளிகளுக்குச் செல்ல விருப்பம் தெரிவிப்பதில்லை. இதுபோன்று சூழல்களிலும் அவ்வொன்றியத்தில் அப்பணி நிலையில் இளையவர்களைப் பணி இறக்கம் செய்து இவர்கள் பணியமர்த்தப்படுவார்கள். இப்பணியிறக்க நடைமுறையால் ஒன்றிய பணிமூப்புப் பட்டியலில் வரிசை மாற்றம் நிகழ்வதுண்டு. இதற்கு மாற்றாக, அவ்வொன்றியத்தில் வேறு பள்ளியில் பணியாற்றும் விருப்பமுள்ள பட்டதாரி ஆசிரியர்கள் தரம்

உயர்த்தப்படும் பள்ளிக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டால், அடுத்தடுத்த பணியிறக்க நிலையினைத் தவிர்க்க முடியும். ஆனால், அவ்வாறு வேறு பள்ளி பட்டதாரி ஆசிரியர்கள் செல்வதற்கு அனுமதிப்பதில்லை. சில இடங்களில், வேறு பள்ளி பட்டதாரி ஆசிரியர்கள் தரம் உயர்த்தப்படும் பள்ளிக்குச் செல்ல எடுத்த பலவேறு முயற்சிகளைத் தொடர்ந்து, அவ்வாறு செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஊதிய முரண்பாட்டினால் பதவி உயர்வில் சென்றவருள் சிலர், கீழ்நிலைப் பணிக்கு பணியிறங்க விருப்பம் தெரிவிப்பதும், அவ்வாறு பணியிறக்கம் செய்யப்படும்போது மேலே செல்லப்பட்டதுபோல் பலர் பாதிக்கப்படுவதும் அதனைத் தொடர்ந்து பணிமூப்புப் பட்டியல் மற்றும் பதவி உயர்வு வாய்ப்பில் ஒன்றிய அளவில் பெரியதொரு மாற்றமும் பாதிப்பும் நிகழ்வதுண்டு. ஒன்றிய பணிமூப்புப் பட்டியல் நடைமுறையே இவை அனைத்திற்கும் அடிப்படைக் காரணி என்பது உள்ளங்கை நெல்லிக்கனியே.

**பதவி உயர்வில் சமநிலை அற்றத் தன்மை**

பள்ளிக் கல்வித்துறையில் பதவி உயர்விற்கான காலிப்பணியிடங்கள் மாநிலம் முழுமைக்கும் தொகுக்கப்பட்டு மாநில முழுவதுமான ஆசிரியர்களின் நியமன நாளின் அடிப்படையில் தேர்ந்தோர் பட்டியல் தயாரிக்கப்பட்டு பதவி உயர்வு வழங்கப்படுகிறது. ஆனால் தொடக்கக் கல்வித்துறையில் ஒன்றிய அளவில் ஏற்படும் காலிப் பணியிடங்களுக்கு, அவ்வொன்றிய அளவில் பேணப்படும் பணிமூப்புப் பட்டியலில் இருந்து தொகுக்கப்படும் தேர்ந்தோர் பட்டியல் அடிப்படையில் பதவி உயர்வு அளிக்கப்பட்டு வருகிறது.

அதனால், ஒரே நாளில் ஒரு மாவட்டத்தின் வெவ்வேறு ஒன்றியங்களில் பணியமர்த்தப்பட்ட ஆசிரியர்களில் பதவி உயர்விற்கு வாய்ப்புகள் அதிகம் உள்ள ஒன்றியத்தில் பணியாற்றும் ஆசிரியர்கள் விரைவாகப் பதவி உயர்வு பெற்றுவிடுகின்றனர்.

ஆனால், பதவி உயர்வு வாய்ப்புகள் குறைவாக உள்ள சில ஒன்றியங்களில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு தாமதமாகவே பதவி உயர்வு வாய்ப்புகள் கிடைக்கப் பெறுகின்றன. சில ஒன்றியங்களில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு பதவி உயர்வு என்பது எட்டாக்கனியாகவே உள்ளது. அதாவது, சிலருக்கு பணி நிறைவடையும் காலம் வரை பதவி உயர்வு கிட்டுவதே இல்லை.

உதாரணமாக, 1995 ஆம் ஆண்டு முதன் முதலாக ஆசிரியர் தேர்வு வாரியத்தின் மூலம் இடைநிலை ஆசிரியராக நியமனம் செய்யப்பட்டவர்களை ஒப்பு நோக்கினாலே பதவி உயர்வில் சமநிலையற்ற தன்மை புரிந்துவிடும். இவர்களில் சிலர் வெகுவிரைவிலே நடுநிலைப்பள்ளி தலைமையாசிரியர்களாகவும்; மாநில முன்னுரிமைப்படி தொடர்ந்து உதவித் தொடக்கக்கல்வி அலுவலராக பணிநிலை மாற்றம் பெற்று, அந்த நிலையிலே 15ஆண்டுகளுக்கும் மேலாக பணியாற்றி வருகின்றனர். ஆனால், இவர்களோடு 1995ல் நியமனம் பெற்றவர்களுள் சிலர், அனைத்துக் கல்வித் தகுதிகள் பெற்றிருந்தும், ஒன்றிய அளவிலான பணிமூப்புப் பட்டியல் பேணும் நடைமுறையால் நாளது வரை தொடக்கப்பள்ளி தலைமையாசிரியராகக்கூடப் பதவி உயர்வு வாய்ப்பு கிடைக்கப்பெறாமல் இன்றும் இடைநிலை ஆசிரியராக சில ஒன்றியங்களில் பணியாற்றி வருகின்றனர்.

இன்றைய ஆசிரியர் தகுதித் தேர்வு நியமனத்தில் இடைநிலை ஆசிரியப் பயிற்சியினை முடித்த பலர், பணிக்கு வருமுன்னே பட்டப்படிப்பு மற்றும் பட்ட மேற்படிப்பினை முடித்து, தங்கள் கல்வித் தகுதியினை மேம்படுத்தியுள்ளனர்.

ஒன்றிய அளவிலான பணிமூப்புப் பட்டியல் மற்றும் பதவி உயர்வு நடைமுறையால் ஒரே நாளில் பணியமர்த்தப்பட்ட இவர்களில், ஓர் ஒன்றியத்தில் நியமனம் பெற்றவர்கள் மிக விரைவிலும்; வேறோர் ஒன்றியத்தில் நியமனம் பெற்றவர்கள் சற்று காலங்கடந்தும் பதவி உயர்வினைப் பெறுகின்றனர். சில ஒன்றியத்தில் நியமனம் பெற்றவர்கள் இறுதிவரை பதவி உயர்வுக்கான வாய்ப்பினைப் பெற முடியாத நிலையில் உள்ளனர்.

அதாவது, ஒரு மாவட்டத்தின் ஓர் ஒன்றியத்தில் பணியாற்றிவரும் ஆசிரியர் பட்டதாரி ஆசிரியர் பதவி உயர்வுக்குரிய கல்வித்தகுதி பெற்று பதவி உயர்விற்காக பல ஆண்டுகள் காத்திருக்கிறார். அதே மாவட்டத்தின் வேறு ஒன்றியத்தில் பணியில் சேர்ந்த ஒருவர் தகுதிகாண் பருவம் முடித்த நிலையிலே பட்டதாரி ஆசிரியராகப் பதவி உயர்வு பெறுகின்றார். மேலும் ஓர் ஒன்றியத்தில் பதவி உயர்வுப் பணியிடங்கள் (அறிவியல் பட்டதாரி / கணிதப் பட்டதாரி) இல்லாத நிலையில் அவ்வொன்றியத்தில் அப்பதவி உயர்வுக்கான கல்வித் தகுதி பெற்ற ஒருவருக்கு இறுதிவரை பதவி உயர்வு பெறுவதற்கான வாய்ப்பு கிட்டாமலே போய்விடுகிறது. அதுவே, வேறு ஒன்றியத்தில் பதவி உயர்வுக்கான வாய்ப்புகள் அதிகம் இருந்தும் அதற்குத் தகுந்த கல்வித் தகுதி உடையவர்கள் அவ்வொன்றியத்தில் இல்லாத நிலையும் உள்ளது. இந்த விந்தை நிலை, தொடக்கக் கல்வித் துறையில் இன்றளவும் பின்பற்றப்பட்டுவரும் ஒன்றிய அளவிலான பணிமூப்புப் பட்டியல் பேணும் நடைமுறையால் நிகழ்ந்து வருகிறது.

**விதிவிலக்கான பட்டதாரி ஆசிரியர் பதவி உயர்வு நடைமுறை**

தொடக்கக் கல்வித் துறையில் விதி விலக்காக 2002ம் ஆண்டு பொது மாறுதல் பதவி உயர்வு நெறிமுறையில் ஒரு புதிய மாற்றத்திற்கான முன்னெடுப்பு தொடங்கப்பட்டது. அதன்படி ஓர் ஒன்றியத்தில் காலியாக உள்ள பட்டதாரிப் பணியிடத்திற்கு அவ்வொன்றியத்தில் தகுதியானவர் எவரும் இல்லையெனில், மாவட்ட அளவில் மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர் அப்பட்டதாரிப் பணியிடத்திற்கு, தங்கள் மாவட்டத்தில் தகுதியானவர்களில் மாவட்ட முன்னுரிமைப்படி தேர்ந்தோர் பட்டியல் தயாரித்து பதவி உயர்வு அளிக்க வாய்ப்பளிக்கப்பட்டது. அதன்படி, திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் அப்பட்டதாரிப் பணியிடத்திற்கு மாவட்ட அளவில் முன்னுரிமைப் பட்டியல் தொகுக்கப்பட்டு, லால்குடி ஒன்றியத்தில் பணியாற்றிய இடைநிலை ஆசிரியருக்கு அந்தநல்லூர் ஒன்றியத்தில் பட்டதாரி ஆசிரியராகப் பதவி உயர்வு அளிக்கப்பட்டது. ஆனால், அடுத்து வந்த ஆண்டுகளில் அந்த நடைமுறையானது கைவிடப்பட்டது. தொடக்கக் கல்வித்துறையில் பணியாற்றும் ஆசிரியர்கள் பதவி உயர்வில், இது போன்ற நிலையற்ற தன்மையினை அவ்வப்போது சந்தித்து வருகின்றனர்.

**ஒன்றியப்பள்ளிகளில் பட்டதாரி ஆசிரியர் நியமனம்/மாறுதல்**

ஆரம்பம் முதல், ஒன்றியப் பள்ளிகளில் இடைநிலை ஆசிரியர் பணி நியமனம் என்பது மட்டுமே நடைமுறைப்படுத்தப்பட்டு வந்துள்ளது. இவர்கள் முன்னுரிமைப்படி நடுநிலைப் பள்ளி தலைமையாசிரியர்களாக பதவி உயர்வு பெற்று வந்த நிலையில், நடுநிலைப் பள்ளி தலைமையாசிரியர்களின் தரத்தினை உயர்த்திடும் நோக்கில், ஒன்றியப்பள்ளிகளின் வரலாற்றில் முதன் முறையாக 1972ல் இளங்கலை ஆசிரியர் பட்டம் பயின்றவர்களை ஒன்றிய நடுநிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்களாக நேரடி நியமனம் செய்தது. இரண்டு மூன்று ஆண்டுகளிலே இந்நடைமுறை கைவிடப்பட்டது. அதன் பின்னர் 1987ல் இடைநிலை ஆசிரியர் பயிற்சி பெற்றவர்கள் போதிய அளவில் இல்லாத காரணத்தினால் காலியாக இருந்த இடைநிலை ஆசிரியர்கள் பணியிடங்களில் தமிழ் பண்டிட் மற்றும் இளங்கலை

ஆசிரியர் பட்டம் பயின்றவர்கள், இடைநிலை ஆசிரியர்களாக ஒன்றியப்பள்ளிகளில் பணியமர்த்தப்பட்டனர். ஓரிரு ஆண்டுகள் மட்டுமே இந்நடைமுறை தொடர்ந்தது.

இதே போன்று, 1997-2000ம் ஆண்டுகளில் SC/ST பிரிவில் இடைநிலை ஆசிரியருக்கான பின்னடைவுப் பணியிடங்களில், அவ்வினத்தைச் சேர்ந்த இளங்கலை ஆசிரியர் பட்டம் பயின்றவர்கள், இடைநிலை ஆசிரியர்களாக ஒன்றியப்பள்ளிகளில் சில நிபந்தனைகளுடன் பணியமர்த்தப்பட்டனர். பின்னாளில் 6 , 7 மற்றும் 8ம் வகுப்புகளில் கற்பித்தல் பணியினைப் பட்டாதாரி ஆசிரியர்களே மேற்கொள்ள அரசு கொள்கை முடிவு கண்டது. ஆயினும், பட்டதாரி ஆசிரியருக்கான தகுதியுடன் இடைநிலை ஆசிரியராகப் பணிபுரிந்துவரும் முன்னவர்களுக்கு பதவி உயர்வுக்கான வாய்ப்பு அளிக்கவில்லை.

மாறாக, 2004ம் ஆண்டு முதல் ஒன்றியப் பள்ளிகளில் இளங்கலை ஆசிரியர் பட்டம் பயின்றவர்கள் இளநிலைப் பட்டதாரி ஆசிரியர்களாக(Junior BT)த் தொகுப்பூதியத்தில் நேரடியாகப் பணியமர்த்தப்பட்டனர். ஒன்றியப் பள்ளி ஆசிரியர்கள் பொது மாறுதல் நடைமுறையில் மாற்றமாக 2005ம் ஆண்டு நடைபெற்ற மாறுதல் கலந்தாய்வில் இந்தப் பட்டதாரி ஆசிரியர்கள் வேறு மாவட்டத்திற்கோ வேறு ஒன்றியத்திற்கோ விருப்ப மாறுதலில் செல்ல அனுமதிக்கப்பட்டனர். அதனைத் தொடர்ந்து, ஒன்றியத்தில் பணியாற்றும் பட்டதாரி ஆசிரியரும் பதவி உயர்வின் மூலம் பட்டதாரி ஆசிரியராகப் பணியாற்றி வருபவரும் மாறுதலில் வேறு ஒன்றியத்திற்கு, வேறு மாவட்டத்திற்குச் செல்ல கதவுகள் திறந்து விடப்பட்டன.

ஒன்றிய அளவிலான பணிமூப்பு நடைமுறையால், ஓர் ஒன்றியத்தில் பணியாற்றும் இடைநிலை ஆசிரியர் அவ்வொன்றியத்தில் ஏற்படும் பட்டதாரி ஆசிரியருக்கான காலிப்பணியிடத்தில் மட்டுமே பதவி உயர்வினைப் பெற முடியும். இந்த நிலையில், ஓர் ஒன்றியத்தில் பட்டதாரி ஆசிரியர் பதவி உயர்வினை எதிர்பார்த்துக் காத்திருக்கும் இடைநிலை ஆசிரியரின் கனவு, இந்த பட்டதாரி ஆசிரியர்களின் ஒன்றிய மாறுதலால் கானல் நீராகிப் போனதும் /போவதும் உண்டு. ஆனால், பள்ளிக் கல்வித்துறையில் பணியாற்றும் ஆசிரியர்களைப் போல் ஒன்றியப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கும் மாநில் அளவில் நியமன நாளின்படி முன்னுரிமைப் பட்டியல் தொகுக்கப்பட்டு பதவி உயர்வு அளிக்கும் நடைமுறை செயலாக்கம் பெறும் வேளையில் மேற்குறிப்பிட்ட சிக்கல் எழாது ஒழிந்துபோகும்.

**ஒன்றியப் பள்ளித் தலைமையாசிரியர் மாறுதல் நடைமுறை**

தொடக்கக் கல்வித் துறையில் ஓர் ஒன்றியத்தில் ஏற்படும் தொடக்கப்பள்ளி தலைமையாசிரியர் மற்றும் நடுநிலைப்பள்ளி தலைமையாசிரியர் காலிப்பணியிடங்கள் அந்த ஒன்றிய அளவிலான பணிமூப்புப் பட்டியலை அடிப்படையாகக் கொண்டு பதவி உயர்வு அளிக்கப்படுவதனால், பதவி உயர்வு பெற்ற தலைமையாசிரியர் எந்தச் சூழ்நிலையிலும் தலைமையாசிரியராக வேறு ஒன்றியத்திற்கோ, மாவட்டத்திற்கோ மாறுதல் பெற இயலாது. குடும்பச் சூழ்நிலை காரணமாக விருப்பத்தின் பேரில் ஒரு தலைமையாசிரியர் வேறு மாவட்டத்திற்கோ அல்லது வேறு ஒன்றியத்திற்கோ செல்ல வேண்டுமாயின், அவர் தனது தலைமையாசிரியர் பதவியினைத் துறந்து, கீழ்நிலைக்கு இறங்கிய பின்னரே மாறுதல் கோர முடியும். இதனால், தொடக்கக் கல்வித் துறையில் பணியாற்றும் எந்த ஒரு தலைமையாசிரியரும் அந்த ஒன்றியத்தினை விட்டு மாறுதல் பெற விரும்புவதில்லை.

இதனால், தொடக்கக் கல்வித்துறை சங்கங்களின் அடிப்படையான வட்டாரப் பொறுப்பாளர்கள் அந்த வட்டாரங்களிலே தொடர்ந்து சங்கப்பணிகள் ஆற்றிட முடியும். இந்த அடிப்படை ஆதாயதிற்காகவே எதிர்கால ஆசிரியத் தலைமுறையினருக்கு சற்றும் பொருந்தாத, ஒன்றிய அளவிலான பணிமூப்புப் பட்டியல் பேணும் நடைமுறையில் இன்றுவரை சங்கங்கள் மாற்றத்தை விரும்பவில்லை.

**இளையோர் மூத்தோர் ஊதிய முரண்பாடுகளைக் களைதல்**

ஒரே பணி நிலையில் பணிபுரியும் இருவரில் இளையவர் மூத்தவரைக் காட்டிலும் அதிக ஊதியம் பெறும் நேர்வில், இளையவருக்கு ஒத்த ஊதியத்தை மூத்தவர் கோரி பெற விதிகளில் இடம் உண்டு. தேர்வு நிலை, சிறப்பு நிலை மற்றும் ஊதியக்குழுப் பரிந்துரையினைத் தொடர்ந்து ஊக்க ஊதிய உயர்வு, பதவி உயர்வு பெறுவதனால் இத்தகைய ஊதிய முரண்பாடுகள் ஏற்படுவதுண்டு. இது போன்ற நேர்வில் பிற துறையைச் சார்ந்த ஒரு பணியாளரோ அல்லது பள்ளிக் கல்வித்துறை ஆசிரியரோ, தன்னைவிட இளையவர் யாரேனும் ஒருவர் இவ்வாறு அதிகமான ஊதியம் பெறும் போது, அவரோடு ஒப்பிட்டு அவருக்கு நிகரான ஊதியம் பெறுவதற்கு வழியுண்டு. ஆனால், தொடக்கக் கல்வித் துறையில் ஒரே ஒன்றியத்திற்குள்ளே பணியாற்றி வரும் ஆசிரியர்கள் மட்டுமே இங்ஙனம் ஒப்பிட்டு ஊதிய முரண்பாடுகளைக் களைய முடியும். ஒன்றிய மாறுதல் பெற்ற ஆசிரியர் யாரும் யாரோடும் இங்ஙனம் ஒப்பிட்டு ஊதிய முரண்பாடுகளைக் களைய முடியாது. இதற்குக் காரணம், ஒன்றிய அளவிலான பணிமூப்புப் பட்டியல் அடிப்படையில் ஒன்றியத்திற்குள் பதவி உயர்வு அளிக்கும் நடைமுறையே ஆகும்.

**ஒன்றியப் பணிமூப்புப் பட்டியலில் சங்கங்களின் நிலைப்பாடு**

தொடக்கக் கல்வித்துறை ஆசிரியர்களுக்கான சங்கங்களின் அடிப்படையே வட்டாரக் கிளைகள்தான். தொடக்கக் கல்வித்துறையில் முந்தைய வட்டார வளர்ச்சி அலுவலர்/ஆணையர்கள் கால ஒன்றிய அளவிலான பணிமூப்புப் பட்டியல் பேணும் நெறிமுறையால், ஓர் ஒன்றியத்தில் பணிபுரியும் ஆசிரியர்கள் அந்த ஒன்றியத்தில்தான் தொடக்கப்பள்ளித் தலைமையாசிரியர்களாக, பட்டதாரி ஆசிரியர்களாக, நடுநிலைப்பள்ளித் தலைமையாசிரியர்களாகப் பதவி உயர்வு பெற முடியும். அப்படிப் பதவி உயர்வு பெற்றவர்கள், எந்த சூழ்நிலையிலும் வேறு ஒன்றியத்திற்கோ அல்லது வேறு மாவட்டத்திற்கோ மாறுதல் பெற வாய்ப்பு இல்லாமல், அந்த ஒன்றியத்திலே பணியாற்றி வருவது சங்கங்களுக்கு மிகவும் ஆதாயமான ஒன்றுதான். அதாவது வட்டாரப் பொறுப்பாளர்கள், உறுப்பினர்கள் அதே ஒன்றியத்தில் தொடர்ந்து இருக்க முடியும்.

தொடக்கக் கல்வித்துறை சார்ந்த ஆசிரியர்களின் முன்னுரிமைப்பட்டியல் மற்றும் பதவி உயர்வுக்கான நாடுநர் பட்டியல் தொகுப்பதில் அவ்வப்போது ஒன்றிய அளவில் எழும் சிக்கல்களை, முரண்பாடுகளை சம்பந்தப்பட்ட ஆசிரியர்களோ அல்லது ஆசிரியர்களுக்கான சங்கங்களோ முன்னெடுத்து உதவித் தொடக்கக் கல்வி அலுவலக அளவிலோ, மாவட்ட தொடக்கக் கல்வி அளவிலோ அல்லது தொடக்கக் கல்வி இயக்குநர் அளவிலோ கொண்டு சென்று தீர்வுகள் காணப்பட்டுள்ளன. இது தொடர்பான இயக்குநர்களின் செயல்முறைகள் பலவற்றில் அவற்றைக் குறிப்பிட்டே தெளிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

சில நேரங்களில், இது போன்ற முன்னுரிமைப்பட்டியல் மற்றும் பதவி உயர்வுக்கான நாடுநர் பட்டியல் தயாரிக்கும்போது எழும் சிக்கல்களில், சில

சங்கங்கள் தங்கள் உறுப்பினர்களுக்காக, ஒரு சார்பாக முன்னெடுக்கும் தலையீடுகள் இருப்பதும் வேதனைக்குரியது. மேலும், அன்று ஒன்றியங்களில் சங்க பொறுப்பாளர்களாகவும், இன்று உதவித் தொடக்கக் கல்வி அலுவலர்களாகப் பணிமூப்புப்பட்டியலினை ஒன்றிய அளவில் தொகுக்கின்ற முக்கிய பொறுப்பு வகிக்கும் சிலரிடம் காணப்படும் சங்க உணர்வுகளும், இது போன்ற சிக்கல்களுக்கு சில வேளைகளில் காரணமாக அமைந்துவிடுகின்றன.

இந்தப் பழைய ஒன்றிய அளவிலான பணிமூப்புப் பட்டியல் நடைமுறையால், ஒரே நாளில் பணியேற்றோரிடையே ஒரு சாரார் எளிதில் பதவி உயர்வு வாய்ப்பினைப் பெறுவதும்; ஒருசாரார் தாமதமாக பதவி உயர்வினை பெறுவதும்; மேலும் சிலருக்கு பதவி வாய்ப்பே இல்லாமல் போவதும் என, பதவி உயர்வில் சமநிலையற்ற தன்மை நிலவுவதைச் சங்கங்கள் நன்கு அறிந்திருக்கின்றன. மேலும், இந்நடைமுறையால் ஒன்றிய மாறுதல் பெறுகின்ற ஆசிரியருக்கு, பதவி உயர்வுக்கான பணிக்கால இழப்பு ஏற்படுவதும்; மாறுதல் பெற்ற ஒன்றியத்தில் அவர் இளையராகக் கருதப்படுவதும்; ஆசிரிய சமூகத்தில் இளையோர் மூத்தோர் பேதம் வளரத்தக்க சமூக அநீதி இளைக்கப்படுவதும் நிதர்சனம். இதைக் கண்டும் சங்கங்கள் நாளதுவரை குரல் எழுப்பாதது விந்தையாய் உள்ளது. மேலும், தொடக்கக் கல்வித்துறை ஆசிரியர்கள் இந்தப் பாதிப்பிலிருந்து விடுபடக் காரணியான, நியமன நாளின்படி மாநில முன்னுரிமைக்கான முன்னெடுப்பிற்கு சங்கங்கள் முட்டுக்கட்டையாய் இருப்பதும் வருத்தத்திற்குரியதே.

எனவே, சங்கங்கள் தங்கள் சொந்த ஆதாயத்தினை மட்டுமே கருத்தில் கொள்ளாமல், தொடக்கக் கல்வித்துறையில் பணிபுரியும் அனைத்து ஆசிரியர்களுக்கும் குறிப்பாக, உயர்கல்வித் தகுதியுடன் இன்று நியமனம் பெறுகின்ற இளைய தலைமுறையினருக்கும் ஏற்புடைய வகையில், பள்ளிக் கல்வித்துறை பணிமூப்புப்பட்டியல் நடைமுறையினைப் போல், நியமன நாளின் அடிப்படையில் பணிமூப்புப் பட்டியலினைத் தொகுத்திடவும்; அதன் மூலம் பதவி உயர்வு மற்றும் மாறுதலில் அனைவருக்கும் சம வாய்ப்புகள் கிடைக்கவும் தேவையான முழு முயற்சியினை சங்கங்கள் உடனடியாக முன்னெடுக்க வேண்டும்.

**மாற்றத்திற்கான வேண்டுகோள்**

தொடக்கக்கல்வித் துறையில் ஆசிரியர்கள் வேலை வாய்ப்பு அலுவலகப் பதிவின்படி மாநில முன்னுரிமைப்படி மாநிலம் முழுமைக்கும் பல்வேறு மாவட்டங்களில் பணியமர்த்தப்பட்டனர். தற்போது ஆசிரியர் தேர்வு வாரியம் மற்றும் ஆசிரியர் தகுதித் தேர்வு மூலம் ஆசிரியர்கள் கலந்தாய்வின் அடிப்படையில் பல்வேறு மாவட்டங்களில் பணியமர்த்தப்பட்டும் வருகின்றனர். அவ்வாறு வேறு மாவட்டத்தில் வேறு ஒன்றியத்தில் பணியமர்த்தபட்டவர்கள் மாறுதல் பெறும் போது, தங்கள் முந்தைய பணிக்காலத்தினை இழந்து ஒன்றியத்தில் இளையவராக வைக்கப்படுகின்ற அவல நிலை தொடர்கின்றது. ஒன்றிய அளவில் ஏற்படும் காலிப் பணியிடங்களில், அவ்வொன்றிய அளவில் பேணப்படும் பணிமூப்புப் பட்டியலில் இருந்து தொகுக்கப்படும் தேர்ந்தோர் பட்டியல் அடிப்படையிலே பதவி உயர்வு அளிக்கப்பட்டு வருகிறது. இதனால், நியமன நாளின்படி இளையவர், மூத்தவரைக் காட்டிலும் முன்னதாகவே சில ஒன்றியங்களில் பதவி உயர்வு பெற முடிகிறது. தொடக்கக் கல்வித்துறையில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு மாறுதல் மற்றும் பதவி உயர்வில் இதுபோன்ற நிச்சயமற்ற, சமநிலையில்லா தன்மை நிலவுகிறது.

தொடக்கக் கல்வித்துறையில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு ஒன்றிய அளவிலான பணிமூப்புப் பட்டியல் நடைமுறையால் ஏற்படும் பாதிப்புகள் நீங்கிட வேண்டும். மேலும் பணிநிரவல் மற்றும் பணி மாறுதல் போன்றவற்றால் இத்துறை ஆசிரியர்கள் தங்கள் பணிமூப்பினை இழக்காமல் இருக்கவும் வேண்டும். அதற்கு, ஒன்றிய அளவிளான முன்னுரிமைப் பட்டியல் முறையினை களைந்து, தொடக்கக் கல்வித் துறையிலும் நியமன நாளின்படி மாநில முன்னுரிமைப் பட்டியல் தயாரிக்கப்பட வேண்டுகிறேன்.

**நம்பிக்கை**

தமிழ்நாடு தொடக்கக் கல்வித்துறைக்கென வகுக்கப்பட்டுள்ள விதியில் (Rule No. 9) 2020ம் ஆண்டு வரை பல திருத்தங்கள்(Amendments) மேற்கொள்ளப்பட்ட போதும், இத்துறையில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு மட்டும் "ஒவ்வோர் ஒன்றியமும் தனியோர் அலகு" ( Each Block is a Unit ) எனக் இன்றளவும் கருதப்பட்டு வருகிறது. அதுவே தொடக்கக் கல்வித்துறையின் தற்போதைய ஒன்றிய அளவிலான முன்னுரிமைப்பட்டியல் நடைமுறைக்கு அடிப்படைக் காரணியாக உள்ளது. உள்ளாட்சி நிர்வாகக் கட்டுப்பாட்டில் தொடக்கக் கல்வி இருந்த காலத்தில் அந்த நிர்வாகச் சூழலுக்கு ஏற்புடைய நிலையில் வகுக்கப்பட்டதே அந்த விதி ஆகும். தொடக்கக் கல்வியானது தனியோர் துறையாக உருவெடுத்த பின்னரும்; துறையில் பணியாற்றும் ஆசிரியர்களின் நியமனம் மற்றும் துறை நிர்வாக நடைமுறையில் எவ்வளவோ மாற்றங்களைக் கண்ட பின்னரும், இன்றைய நடைமுறைக்கு சற்றும் பொருந்தாத இவ்விதியின் அந்தப்பகுதியானது மாநிலம் முழுமையும் ஓர் அலகென (State is a Unit) மாற்றப்பட வேண்டும்.

ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி நடைமுறையில் தொடக்கக் கல்வித் துறை ஆசிரியர்களுக்கும் பள்ளிக் கல்வித்துறையில் பின்பற்றப்படுவது போன்று மாநில முன்னுரிமைப் பட்டியல் நடைமுறை பின்பற்றப்படுவதன் மூலம்,

- இம்மாற்றத்தால் அரசிற்கு எந்தவொரு நிதியிழப்பும் இல்லை.
- உபரி ஆசிரியர்களைத் தேவையுள்ள இடங்களுக்கு மாறுதல் செய்ய முடியும்
- தொடக்கக் கல்வித் துறையில் உள்ள உபரி ஆசிரியர்களை பள்ளிக் கல்வித்துறைக்கும்; பள்ளிக் கல்வித் துறையின் உபரி ஆசிரியர்களை தொடக்கக் கல்வித் துறைக்கும் மாற்றிக் கொள்ள முடியும்.
- பணிநிரவல் காரணமாக எழும் முன்னுரிமை சிக்கல்கள் முடிவுக்கு வரும்.
- ஒன்றிய அளவில் பணிமூப்புப் பட்டியல் தொடர்பாக எழுகின்ற பல்வேறு சிக்கல்கள் நீங்கும்.
- முன்னரிமைப் பட்டியல் தொடர்பான முரண்பாடுகள் குறைந்து முன்னுரிமைப் பட்டியல் தொகுக்கும் நடைமுறை எளிமையாகும்.
- பதவி உயர்வில் அனைவருக்கும் சம வாய்ப்பு கிடைக்கும்.
- இளையோர் மூத்தோர் பேதம் குறையும்.
- பிற ஒன்றியங்களுக்கு விருப்ப மாறுதல் மறுக்கப்பட்ட தொடக்க மற்றும் நடுநிலைப்பள்ளித் தலைமையாசிரியரும் விருப்ப மாறுதலில் செல்ல முடியும்.
- முன்னுரிமைப் பட்டியலின் வெளிப்படைத்தன்மையை அனைவரும் அறிந்து கொள்ள முடியும்.
- 40 ஆண்டுகளாகத் தொடர்ந்துவரும் பின்னோக்கு நடைமுறை முடிவுக்கு வரும்.
- துறையில் பணியாற்றும் ஆசிரியர்கள் அனைவருக்கும் சம நீதி கிடைப்பதன் மூலம் சமூக நீதி காக்கப்படும்.

இதுவே நம் கனவு; அதுவே நம் நம்பிக்கை. விடியட்டும் நம்பிக்கை விரைவில்.

**முடிவுரை**

"*பழையன கழிதலும் புதியன புகுதலும்   வழுவல கால வகையினானே*"- எனும் நன்னூலாரின் வாக்கிற்கிணங்க, தொடக்கக்கல்வியைப் பொருத்தவரை நிர்வாக அமைப்பு முறையிலும்; ஆசிரியர்களின் பணி நியமன நடைமுறையிலும் எவ்வளவோ மாற்றங்களைக் கண்டுள்ளது. மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலக முன்னுரிமைப்படி மாவட்டத்திற்குள் ஆசிரியர்கள் பணியமர்த்தப்பட்ட நிலை மாறி, தற்போது ஆசிரியர்கள் மாநில முழுமைக்கும் பணியமர்த்தப்பட்டு வருகின்றனர். ஆயினும், உள்ளாட்சித்துறையின் கட்டுப்பாட்டில் இருந்த காலத்தில் பின்பற்றப்பட்ட, ஒன்றிய அளவிலான பணிமூப்புப் பட்டியல் பேணும் நெறிமுறை இன்றளவும் மாற்றத்திற்கு உட்படாமல் தொடக்கக்கல்வித் துறையில் கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

ஆசிரியர் பணி நியமனத்தில் வேலைவாய்ப்பு அலுவலக பதிவு அடிப்படையில் மாநிலம் முழுமைக்குமான முன்னுரிமைப் பட்டியல்(STATE WIDE SENIORITY) நடைமுறைக்கு அன்று தமிழக அரசு கொள்கை முடிவு கண்டது. தற்போது ஆசிரியர் மாவட்ட மாறுதல் கலந்தாய்வு, ஆன் லைன் முறையில் மாநில முன்னுரிமை அடிப்படையில் தொகுக்கப்பட்டு வழங்கப்படுகிறது. மேலும் தற்போது தொடக்கக் கல்வித்துறை ஆசிரியர்களின் அனைத்து விவரங்களும் ஆன் லைனில்(EMIS) தொகுக்கப்பட்டுள்ளன. ஆகையால், தொடக்கக் கல்வித்துறையில் நியமன நாளின் அடிப்படையில் மாநில முன்னுரிமைப் பட்டியல் தொகுப்பது சாத்தியமே.

மாவட்ட அளவிலான வேலை வாய்ப்பு அலுவலக முன்னரிமைப்படி ஆசிரியர் நியமனம் என்ற நடைமுறையால் ஒரு சில மாவட்டத்தில் பதிவு செய்தவர்கள் மட்டும் விரைவில் நிமனம் கிடைக்கப் பெற்றதும்; சில மாவட்டத்தவர்கள் பதிவு செய்து பல ஆண்டுகளாக நியமனத்திற்குக் காத்திருந்தும் பணி வாய்ப்ப கிடைக்காத நிலையினை மாற்றி, சீர்திருத்த நடைமுறையாக 2009ல் மாநில முன்னுரிமைப்படி ஆசிரியர் நியமனம் கண்டதுபோல், தொடக்கக் கல்வித் துறையிலும் சீர்திருத்த நடவடிக்கையாக நியமன நாளின்படி பணிமூப்புப் பட்டியல் தொகுக்கப்பட்டு அதன் அடிப்படையில் பதவி உயர்வும் பணியிட மாறுதலும் வழங்கப்பட வேண்டும். அவ்வாறு நியமன நாளின்படி மாநில அளவில் முன்னுரிமைப் பட்டியல் தொடக்கக் கல்வித் துறையிலும் தொகுக்கப்படும் போது, பழைய ஒன்றிய பணிமூப்புப் பட்டியல் நடைமுறையால் அடுத்த நிலையில் பதவி உயர்வினை எதிர்பார்த்து இருப்போருக்கு பதவி உயர்வு சற்றே தள்ளிப் போகலாம். ஆனால், இந்த சமூக மாற்றத்தினை முன்னெடுப்பதன் வாயிலாக பதவி உயர்வுக்கான உரிய கல்வித் தகுதியோடு காத்திருக்கும் நியமனத்தால் மூத்தவர்கள் பலருக்கும் இஃது விடியலாய் அமையும் என்பது நிச்சயம். அதனைத் தொடர்ந்து, நியமன நாளின்படி அனைவருக்கம் உரிய காலத்தில் பதவி உயர்வுக்கான முறையான வாய்ப்பு கிட்டும்.

தொடக்கக் கல்வித் துறையின் ஒன்றிய பணிமூப்புப்பட்டியல் நெறிமுறையின் துவக்கம், தற்போதைய நடைமுறை மற்றும் பதவி உயர்வு, பணியிட மாறுதலில் அதன் தாக்கத்தினை அனைவரும் அறிந்திட வேண்டும். இவ்வொன்றிய அளவிலான முன்னுரிமைப்பட்டியல் நடைமுறையால் தொடக்கக் கல்வித் துறை ஆசிரியர்களுக்கு ஏற்படுகின்ற பாதிப்புகளைக் குறிப்பாக, ஒன்றியப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் உணரவேண்டும். அதன் மூலம் ஆசிரியர் அனைவருக்கும் சமநீதி கிட்டும் வண்ணம், ஒன்றிய பணிமூப்புப் பட்டியல் நடைமுறையில் எதிர்நோக்கும் நியமன நாளின்படியான முன்னரிமைக்கான நல்ல

மாற்றத்தினை ஏற்றுக்கொள்ளவும் அதற்காய் ஒன்றிணையவும் ஒருமித்து குரல் எழுப்பவும் வேண்டும். இந்நடைமுறை மாற்றத்தின் மூலம், தொடக்கக் கல்வித் துறை ஆசிரியர்களுக்கும் பதவி உயர்வில் உரிய சம வாய்ப்பு கிடைத்திடவும் பதவி உயர்வு பெற்றவர்களுக்கும் பொது மாறுதலில் பங்கேற்க கதவுகள் திறக்கப்படவும் இளையோர் மூத்தோர் பேதம் களையப்படவும்; அதனால் ஏற்படுகின்ற பல்வேறு ஊதிய முரண்பாடுகளுக்கு தீர்வுகள் கிடைத்திடவும் வேண்டும்.

தொடக்கக் கல்வித் துறையின் நிர்வாகச் சீர்திருத்த நடவடிக்கையாக, பள்ளிக்கல்வித்துறை மற்றும் பிற துறைகளின் நடைமுறைபோல, நியமன நாளின்படி மாநில அளவிலான முன்னுரிமைப் பட்டியல் தயாரித்து நடைமுறைப்படுத்தும் வகையில், அரசு நல்லதொரு கொள்கை முடிவு காண வேண்டும். அதன் தொடர்ச்சியாக, தொடக்கக் கல்வித்துறையில் நியமன நாளின்படி மாநில அளவில் முன்னுரிமைப் பட்டியல் தொகுக்கப்பட்டு, நாம் எதிர்நோக்கியுள்ள பதவி உயர்வில் அனைவருக்கும் சம வாய்ப்பு; பதவி உயர்வு பெற்றவருக்கும் பொது மாறுதலில் பங்கேற்க வாய்ப்பு கிடைக்கும் வகையிலான நியாயமான நம் கனவு விரைவில் மெய்ப்படும்.

**நன்றி**

*உங்களில் ஒருவனாக நம்பிக்கையுடன்,*

***திருச்சிராப்பள்ளி***

30.06.2020

***9150056221*** **ஸ்டனிஸ் ரத்தினம் சி.ரா.**